Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

மாகறல்

திருத்தல வரலாறு

[திருஞானசம்பந்தர் சுவாமிகள் பாடல் பெற்ற திருத்தலம்]



தொகுப்பாசிரியர்

பொய்கை. வெ. ஆனந்த சுந்தரராஜன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இரண்டாவது நுழைவு வாயில்



இராஜகோபுரம் கட்டுவதற்கு முன் இருந்த தோற்றம்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
தஞ்சாவூர்
அருள்தரும் பெரியநாயகி உடனாய அருள்மிகு பெருவுடையார் துணை

மாகறல்
திருத்தல வரலாறு

[திருஞானசம்பந்தர் சுவாமிகள் பாடல் பெற்ற திருத்தலம்]

தொகுப்பாசிரியர் & வெளியீடு

வெ. ஆனந்த சுந்தரராஜன்
நெ.1/15 பிள்ளையார் கோயில் வீதி,
பொய்கை – 632 114, வேலூர் மாவட்டம்.
அலைபேசி : 99527 61312 தகவல் சங்கர் : 9894185803

திருவள்ளுவர் ஆண்டு 2039 (சர்வதாரி ஆண்டு) ஐப்பசி 23 (08–11–08) சனிக்கிழமை தஞ்சைப் பெரியகோயிலை எடுப்பித்த **மாமன்னர் சிவபாதசேகரன், திருமுறை கண்ட சோழன்** என்னும் சிறப்புடைய **இராஜராஜ சோழன்** (அரசாட்சி, 985–1012) சதயத்திருநாளில் தஞ்சாவூரில் முதல் பதிப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
கட்டுப்பாட்டில் இத்திருக்கோயில் உள்ளது

நூல் விவரம்

நூலின் பெயர்	:	மாகறல் திருத்தல வரலாறு
தொகுப்பாசிரியர்	:	பொய்கை வெ.ஆனந்த சுந்தரராஜன்
முதல் பதிப்பு	:	மாமன்னர் இராஜராஜ சோழனின் சதயத்திருநாள் ஐப்பசி 23 (08–11–08) சனிக்கிழமை
பதிப்பு உரிமை	:	தொகுப்பாசிரியர்க்கு
வெளியீட்டு எண்	:	10
வெளியீடு	:	வெ.ஆனந்த சுந்தரராஜன் 1/15, பிள்ளையார் கோயில் வீதி பொய்கை – 632 114 வேலூர் மாவட்டம் அலைபேசி : 9952761312, தகவல் சங்கர் : 9894185803
மேல் அட்டையின் தன்மை	:	ஜெ.கே. ஆர்ட் போர்டு 220 ஜி.எஸ்.எம்
தாளின் தன்மை	:	பலாப்பூர் 21.3, மேப்லித்தோ
அச்சுகோப்பு	:	சுதா பிரிண்டர்ஸ் நெ.35/ஏ, டி–மண்டி தெரு, வேலூர் அலைபேசி : 9345302532, 9360773072
பக்கங்கள்	:	72
விலை	:	ரூ. 30.00
அச்சிடல்	:	ஸ்ரீ விஜயா பிரிண்டிங் பிரஸ் 46, ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை – 15 தொலைபேசி: 044 – 23812693, 23812621

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழிவிலா ஆனந்த வாரி போற்றி !
முழுவதும் கடந்த முதல்வா போற்றி !!



இந்நூல்
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள் (1906-1993)
திருப்பாதங்களுக்குச் சமர்ப்பணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
திருச்சிற்றம்பலம்

பேராசிரியர் முனைவர் புரிசை ச.நடராசன்.
நெ, 8 முதலாவது தெரு, எழில் நகர்,
திருப்பத்தூர்–635 601, வேலூர் மாவட்டம்.
தொலைபேசி எண் : 04179–222842

அணிந்துரை

திருஞானசம்பந்தரின் திருமாகறல் திருப்பதிகம் "வினை தீர்க்கும்" சிறப்பினைப் பெற்றது.

இராஜேந்திர சோழனுக்கு இறைவன் பொன்னிறஉடும்பாகத் தோன்றி, அவன் துரத்த, புற்றில் ஒடி மறைந்து, பின் சிவலிங்கமாகக் காட்சியளித்த திருமேனி தான் தோன்றி (சுயம்பு). ஆவுடையார் தான் கட்டப் பெற்றது. இறைவன் திருப்பெயர் திருமாகறலீஸ்வரர். இறைவியின் திருநாமம் திரிபுவனநாயகி. மாகறம் என்னும் வடச்சொல்லுக்கு உடும்பு என்று பொருள். இவ்வூர் இறைவன் பன்னிரண்டு பெயர்களைப் பெற்றிருந்தாலும் மக்கள் வழக்கில் 'மாகறலீஸ்வரன்' என்றே மகாதேவர் வழங்கப் பெறுகிறார்.

பின்னளப்பேறு வேண்டுவோர் இத்திருக்கோயிலில் அங்கப்பிரதட்சணம் செய்யும் வழக்கம் பன்னெடுங்காலமாக உள்ளது.

"ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல்"–என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் சிறப்புடைய இவ்வூர், கோயில் வரலாற்றை நூலாகத் தொகுத்து அன்பர். திரு. வெ.ஆனந்த சுந்தரராஜன் வெளியீடு செயகின்றார். இப்பெருந்தகை, இதற்கு முன்பாக விரிஞ்சிபுரம், "வழித்துணைநாதர்" என்னும் மார்க்கசகாயர் வரலாற்றையும், வேலூர்க் கோட்டை "நீர்த்திரளர்" என்னும் ஜலகண்டீஸ்வரர் வரலாற்றையும் தொகுத்து வெளியிட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புண்ணியர். இப்போது, இவர், தமிழ் உலகிற்கு வழங்கும் இந்நூலில், கோயில்குருக்கள், ஓதுவார், கோயில் பணியாளர் ஆகியோரிடம். கேட்டறிந்த செய்திகளை அமைத்துள்ளார். காஞ்சிபுரம், "சைவநெறிச்செம்மல்" "ஏகாம்பரநாதர் உலா நூல் மறுபதிப்பாளர், " பேராசிரியர், முனைவர். சிவசண்முகசுந்தரம் அவர்களால் திருஞானசம்பந்தரின் தேவாரத்திற்கும், தோத்திரக்கோவை, திருநாமப்பெயர் விளக்கப்பாடல்கள் ஆகியனவற்றுக்குத் தெளிவுரையும், பொருளுரையும் எழுதப்பெற்றுள்ளன."செய்யாறு பெற்றசெல்வம்," "தமிழ் வேதமாமணி," விநாயக. வீரமணி அவர்கள் எழுதிய இறைவனின் திருப்பெயர்கள் விளக்கவுரை உள்ளது. "அருங்கலை நாயகம்" ம.காந்தி, அவர்களின் அரும்பெரும் உதவியால் கோயிலில் இடம் பெற்றுள்ள பதின்மூன்று கல்வெட்டுகளின் செய்திகளைக் காண்கிறோம். கோயில் வரைபடமும், நாள் வழிபாட்டு விவரமும், பெருந்திருவிழாச் செய்தியும், அருள்பெற்ற அன்பரின் வரலாறும், முறையாக இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வண்ணம், மலர்களில் உள்ள மகரந்தங்களைச் சேகரித்து, தன்னிடம் ஊறும் சுவைநீரையும் கூட்டி, இனிய தேன் அடையை அமைக்கும் தேனீபோல பொய்கை, வெ.ஆனந்த சுந்தரராஜன் அவர்கள் பிறர் உதவியைக் கொண்டும் தன் முயற்சியை இணைத்தும், இந்த நூலைப் புனைந்திருக்கின்றார். செய்திகளைத் தேடித் தொகுக்கும் திறனுடைய இந்நூலசிரியரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன். இப்பெருமகனார் பாடல் பெற்றபல தலங்களின் வரலாற்றை இங்ஙனமே தொகுத்துச் செம்மையாக வெளியிட, திருமாகறல், அருள்தரும். திரிபுவன நாயகி உடனாய அருள்மிகு திருமாகறல் பெருமான் திருவடிகள் துணையாக விளங்க வேண்டும் என வாழ்த்தி அமைகிறேன்.

[illegible]
[illegible]

[illegible]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை தொடர்ச்சி,,,,

திருப்பத்தூர் எழில் நகர் முனைவர். புரசை ச.நடராசன், அவர்களுக்கு அணிந்துரை வழங்கிய கருணைக்கு எனது நன்றியைத் உரித்தாக்குகிறேன்.

இந்நூலை அன்பர்கள் ஓதியும், ஓதுவித்தும் சிவபுண்ணியச் செயலுக்குத் தொடர்ந்து ஆதரவு நல்கவும் இறையருளைப் பெற்றின்புறவும் வேண்டுகிறேன்.

திருத்தொண்டர் துதிப்பாடல் விளக்கம்

உலகத்தில் உள்ள பற்றுகள் அனைத்தையும் விட்டமையால் நந்தி வாகனம் உள்ள உருத்திர கணங்களைச் சார்ந்த மந்திரேசரையும் மந்திர மகேசரையும் சார்ந்து ஐந்து முகமுள்ள சதாசிவத்தின் இணையற்ற திருவடிகளை அடைந்த அறுபத்துமூன்று நாயன்மார்களைப் பணிந்து வணங்குவோம்.

காஞ்சிபுரம் முனைவர் சிவ சண்முகசுந்தரம்

நூல் கிடைக்கும் இடங்கள்

1. திரு.டாக்டர் **நட.துரைராஜன்** M.S., F.R.C.S.,
   பரம்பரை அறங்காலர்,
   அருள்மிகு திருமாகறலீசுவரர் திருக்கோயில், மாகறல்
   அக்ஷயா F–94, அண்ணா நகர் கிழக்கு, சென்னை – 600 102.
   தொலைபேசி : 044–26261526, அலைபேசி : 98400 83583

2. திரு.**சண்முக சுந்தரம் குருக்கள்**
   230A, பெரிய தெரு, மாகறல்–631603.
   காஞ்சிபுரம் வட்டம் & மாவட்டம், அலைபேசி : 94448 10396

3. திரு.**சண்முகம் முதலியார்**
   அருள்மிகு திருமாகறலீசுவரர் திருக்கோயில் பணியாளர்
   இராஜ வீதி, மாகறல், தொலைபேசி : 044 – 27240294

4. சிவத்திரு. **தியாகு.ஆடலரசு**
   அருள்மிகு திருமாகறலீசுவரர் திருக்கோயில் ஓதுவார்
   இராஜ வீதி, மாகறல், தொலைபேசி : 044 – 27240323

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ. எண்.	பொருளடக்கம்	பக்கம் எண்.
	முன்னுரை	8
1.	1. இறைவனின் 12 திருப்பெயர்கள்	10
	2. யானை வாகனத்தில் முருகர்	11
2.	பலாப்பழ நைவேத்தியம்	12
3.	கல்வெட்டுச் செய்திகள்	13
4.	வழிபாடுகள் & மாசி மகப் பெருவிழா விவரம்	32
5.	1. திருப்பணிகள்	34
	2. திருக்கோயில் சொத்து விவரம்	
	3. திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்கள்	35
	4. ஸ்ரீ காசிமடம் – ஓதுவார் நியமனம்	
6.	திருக்கோயில் வரைபடம்	36
7.	வரைபட எண்கள் குறிக்கும் விவரம்	37
8.	திருக்கோயில் பாடல்கள் அட்டவணை	39
9.	1. நான்கு கால பூசை விவரம்	71
	2. தரிசன நேரங்கள்	
	3. போக்குவரத்து வசதி விவரம்	

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்கை. வெ. ஆனந்த சுந்தரராஜன்

நாள் : 14–09–2008

முன்னுரை

திருத்தொண்டர் துதி

நந்திவாகனத்து உருத்திர கணங்களை நண்ணி
மந்திரேசனை மந்திரி மகேசரை மருவி
ஐந்து மாமுகத்து இறையவர் பதவியை அடைந்து
பந்தம் நீங்கிய அறுபதின் மூவரைப் பணிவாம்

– சைவ எல்லப்ப நாவலர்
திருவிரிஞ்சைப் புராணம் பாயிரம் பாடல் எண். 8

தஞ்சைப் பெரியகோயிலில் உகந்து எழுந்தருளியுள்ள அம்மையப்பர் திருக்கருணை, எளியவனை திருக்கோயில்கள் வரலாறுகளைத் தொகுத்து வெளியிடும் பணியில் ஈடுபடுத்தியது. அப்பெருமானின் துணைகொண்டு விரிஞ்சிபுரம் அ/மி வழித்துணைநாதர் திருக்கோயில் வரலாறும், வேலூர்க் கோட்டை அ/மி ஜலகண்டேசுவரர் திருக்கோயில் வரலாறும் தொகுத்து தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டன.

மும்முடிச்சோழன். கேரளாந்தாகன் என்னும் மாமன்னர் இராஜராஜசோழன் எடுப்பித்த தஞ்சைப் பெரியகோயில் குறித்த வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து 2008–ஐப்பசி சதயத்திருநாளில் வெளியிட விரும்பினேன். ஆனால் அப்பணி முழுமையடைய மேலும் சிறிது காலம் தேவைப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில்,

1. தஞ்சைப் பெருவுடையார் திருப்பதிகங்கள் (கருவூர்த்தேவர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளியவை)
2. தஞ்சைப் பெருவுடையார் உலா
3. தஞ்சைப் பெருவுடையார் பாமாலை

(2&3 கொட்டையூர், சிவக்கொழுந்து தேசிகர் அருளியது)
ஆகிய நூல்கள் முதற்கட்டமாக, தமிழ்ப்புத்தாண்டு நாளான 13–04–08 அன்று வெளியிடப்பட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தஞ்சைப்பெரிய கோயில் வரலாற்று நூல் தொகுக்கும் பணி முழுமையடைவதற்கிடையில், ஐப்பசி சதயத்திருநாளில் தேவாரப்பாடல் பெற்ற திருமாகறல் திருத்தல வரலாறு வெளியிடும் பேறு இறையருளால் வாய்க்கப் பெற்றது.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகப் பாராயணத்தால் அடையக்கூடிய நன்மைகளையெல்லாம் உணர்ந்து அன்பர்கள் இந்நூலைப் பயின்று பயன்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

செய்திகள் தொகுப்பதற்கு உதவியவர்கள்

1. திரு.ம.காந்தி (காப்பாட்சியர் ஒய்வு) வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியம், வேலூர் – கல்வெட்டுச் செய்திகள்.
2. முனைவர் சிவ.சண்முகசுந்தரம், காஞ்சிபுரம்: திருஞானசம்பந்தர் சுவாமிகள், தெய்வச்சேக்கிழார், வள்ளலார் சுவாமிகள், மோசூர் முனிசாமி முதலியார், பன்னிருதிருநாமங்கள் பெயர்க்காரண விளக்கப்பாடல்கள் ஆகியனவற்றுக்குத் தெளிவுரை எழுதி உதவியுள்ளார்.
3. சிவத்திரு விநாயக வீரமணி, செய்யாறு; இறைவனின் 12 திருப்பெயர்கள்.
4. திருலோ.சங்கர், பொய்கை
5. திரு.சண்முக முதலியார், திருக்கோயில் பணியாளர், மாகறல்
6. திருமுறைத்திலகம் தியாகு.ஆடலரசு ஒதுவார், மாகறல் திருக்கோயில்
7. திருக்கோயில் அர்ச்சகர் சண்முக சுந்தர குருக்கள், மாகறல்
8. மறைமலையடிகள் நூலகம், எழும்பூர் சென்னை
9. டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூலகம், பெசண்ட் நகர், சென்னை
10. பகவான் இரமண மகரிஷி நூலகம், திருவண்ணாமலை

உதவி புரிந்த பெருமக்கள் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

முன்னுரை தொடர்ச்சி 6–ஆம் பக்கம்....

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. (1) இறைவனின் 12 திருப்பெயர்கள்

செய்யாறு விநாயக வீரமணி

1. படைப்புத்தொழிலை ஆணவத்தால் இழந்தபின் வழிபட்ட பிரமனுக்கு அருள்புரிந்து உலகங்களை நிலை நிறுத்தியதால் **நிலையிட்ட நாதர்.**

2. தேவர்களா தியாவருக்கும், எல்லா உலகத்தவருக்கும் அடைக்கலம் தந்து முப்புரத்து அசுரர்களை அழித்ததால் **அடைக்கலங் காத்த நாதர்.**

3. திரிபுராந்தகராக திருமாலாகிய விடைமேல் எழுந்தருளி ஆபத்திலிருந்த எல்லோரையும் காத்ததால் **ஆபத்தில் காத்தவர்.**

4. நெற்றிக்கண்ணால் எரியுண்ட மன்மதனை, இரதிதேவிவேண்ட அநங்கனாக்கி, அவளதுமங்கலத்தைக் காத்தருளியதால் **மங்கலங்காத்த நாதர்.**

5. மாகு (பாசப் பிணிப்பு) அறுத்து, சிவவழிபாட்டுணர்வையூட்டி அருளுவதால் **திருமாகறலான்.**

❖ மாகறம் என்னும் சொல் வடமொழி சொல், இச்சொல் 'உடும்பு' என்னும் பொருள் தருகிறது. சோழ மன்னனுக்கு உடும்பு வடிவில் காட்சியளித்தமையினால் **'உடும்பீசர்'**

6. காசிபன் முனிவர் செய்த யாகம் முற்றுப்பெறஅருளியதால் **மகம் வாழ்வித்த நாதர்.**

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. குருவாகியே அகத்தியமுனிவருக்கு நன்மொழியும் முத்தமிழும் அருளி, முனிவரது பெயரையும் தரித்துக் கொண்டதால் **அகத்தீசர்.**

8. தவறான ஒழுக்கத்தால், தேவகுருவின் சாபம் பெற்றசந்திரனுக்குப் பரிவோடு அபயம்தந்து காத்ததால் **பரிந்துகாத்த நாதர்.**

9. தவறுசெய்த, குருபத்தினியான தாரைக்கு சாபவிமோசனம் அருளி, அவளை ஆபத்தினின்றும் காத்ததால் **ஆபத்சகாயர்.**

10. சோழமன்னனின் கவனம் இறைநெறியில் திரும்ப, பொன்னிறஉடும்பாகத் தோன்றி, ஆட்கொண்டதால் **தடுத்தாட்கொண்டார்.**

11. சோழமன்னன் உடும்பின் பின்தொடர்ந்துவந்து, புற்றினை இடமாகக் கொண்டிருந்த இலிங்கத்திருமேனியைத் தரிசனம் செய்யும்வகை வெளிப்பட்டதால் **புற்றிடங் கொண்டார்,**

12. புற்றிடங்கொண்டார் பெருங்கருணையினால் சோழமன்னனின் பெருங்குற்றங்களைப் பொறுத்தருளியதால் **பாரத்தழும்பர்.**

பயன்பட்ட நூல் :

பன்னிரு திருநாமங்கள் பெயர்க்காரண விளக்கப்பாடல்கள்.

1.(2) யானைவாகனத்தில் முருகர்

முருகப் பெருமான் யானைவாகனத்தில் அமர்ந்த திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். இத்திருக்கோயிலில் உள்ள படியான அருட்கோலத்தை ஒரு சில திருக்கோயில்களில் மட்டுமே தரிசிக்கமுடியும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2.பலாப்பழம் நைவேத்தியம்

திருமாகறலில், பெருமானருள் பெற்றதன் நினைவாக பிரமன் ஒரு அதிசய பலாமரத்தைப் படைத்தான். அப்பலாமரத்தினின்று தினமும் மூன்று கனிகள் கிடைத்து வந்தன. அவற்றில் ஒருபழம் கயிலைநாதருக்கும், ஒருபழம் மாகறல் ஈசனுக்கும் நைவேத்தியமாகப் படைக்கப்பட்டுவந்தன.

மூன்றாவது பலாப்பழம் மாகறலிலிருந்து தில்லையம் (சிதம்பரம்)பதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு கூத்தப் பெருமானுக்கு நைவேத்தியம் செய்யப்பட்டு வந்தது. அவ்வாறு நைவேத்தியம் செய்யப்பட்ட கனி இராசேந்திர சோழ மன்னுக்குப் (ஆட்சிக் காலம் கி.பி.1012–44) பிரசாதமாகச் சேர்ப்பிக்கப்பட்டு வந்தது.

காலப்போக்கில் அறியாமைக்கு ஆளாகிய கோயில் பணியாளர்கள் பலாமரத்தைத் தீ வைத்து அழித்து விட்டனர். சிதம்பரத்திலிருந்து பிரசாதம் வருவது தடைப்படவும், சோழ மன்னன் விசாரணை செய்து மாகறல் பலாமரம் தீயில் கருகிப்போன செய்தியை அறிந்து கொண்டான். பெருங்குற்றம் செய்தவர்கள் சிவப்பணியாளர் என்பதால் மன்னன் அவர்களுக்கு அதிகமான தண்டனைத் தர விரும்பாமல் நாடு கடத்த மட்டுமே உத்திரவிட்டான்.

மன்னர் உத்திரவை நிறைவேற்ற வீரர்கள், தவறு செய்த சிவப்பணியாளர்களை அழைத்துச் சென்றனர். மாகறல் நாட்டு எல்லையைத் தாண்டி மறுநாள்விடியும் பொழுதில் அவர்களை ஓர் ஊரில் விட்டுத்திரும்பினர். அப்படி விடப்பட்ட ஊர் (திருத்தணிக்கும் திருவள்ளூருக்கும் இடையில்) விடிமாகறல் என்று வழங்கப்படுகிறது.

பயன்பட்ட நூல்கள்:

1. *திருமுறை தலங்கள், பதிப்பு 2001 பு.மா.ஜெயசெந்தில் நாதன், வெளியீடு : வர்த்தமானன் பதிப்பகம், சென்னை; பக்கம் 42*
2. *தொண்டை நாட்டுத் திருமுறைத் தலங்கள் 32, பதிப்பு 2004 காஞ்சிபுரம் வி.விஜயகுமார். வெளியீடு தில்லை வரதன் காஞ்சிபுரம். பக்கம் 64*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. கல்வெட்டுச் செய்திகள்

ம.காந்தி, காப்பாட்சியர், பணி நிறைவு
வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம், வேலூர்.

முன்னுரை

ஓர் ஊரின் அல்லது நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள பயன்படும் வரலாற்றுச் சான்றுகளில் முதன்மை பெறுவது கல்வெட்டுகளாகும். அந்த வகையில் மாகறலுடன் அதைச் சுற்றியுள்ள ஊர்களின் வரலாற்றை அறிய மாகறல் கோயில் கல்வெட்டுகள் உதவுகின்றன்.

பண்டைய பெருமைகளை அறிந்து வரலாற்றை எழுதி புதுமைக்கு அடியெடுத்து வைக்க இன்றியமையாத வரலாற்றுச் சான்றுகளாக விளங்கும் கல்வெட்டுகளை அழிக்காமல் காப்பாற்ற வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

நான்கு கால் மண்டபம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ. எண்.	மன்னர் பெயர்கள்	கல்வெட்டு எண்ணிக்கை	Annual Reports on Indian Epigraphy (A.R.E. No) ஆண்டு அறிக்கை எண்கள்	South – Indian Inscriptions Volume VII S.I.I. Vo-V11, No தென்னிந்தியா கல்வெட்டுகள் தொகுதி – 7 எண்கள்.	காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் த.நா.அ.தொல்லியல் துறை தொடர் எண்கள்
1.	சோழர்கள் 1. இரண்டாம் குலோத்துங்கன் 2. இரண்டாம் இராஜராஜன் 3. மூன்றாம் குலோத்துங்கன் 4. .... 5. .... 6.	1 1 1 1 1 1	215/1901 219/1901 220/1901 .... 217/1901	428 432 433 430	13/2005 10/2005 1/2005 5/2005 2/2005 6/2005
2.	தெலுங்குச் சோழர் 1. விஜயகண்ட கோபாலன்	2	...... 150/1923	....	3/2005, 9/2005
3.	பாண்டியர் 1. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்	1	216 /1901	429	12/2005
4.	விஜயநகர மன்னர் 1. கம்பண உடையார்	1	......	......	14/2005

<u>குறிப்பு:</u> மன்னரின் பெயரும் தெரியாமல் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. 4, 7, 8, 11/2005 இவையும் அனைத்தும் த.நா.அ.தொல்லியல் துறை தொடர் எண்கள் ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. கல்வெட்டுச் செய்திகள்

கல்வெட்டு எண் – 1

அரசு பரம்பரை	:	--
அரசன் பெயர்	:	--
ஆட்சி ஆண்டு	:	--
கல்வெட்டு காலம்	:	கி.பி.11–ஆம் நூற்றாண்டு
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் திருச்சுற்று மாளிகையின் தூண்

செய்திச் சுருக்கம்

இந்தக் கல்வெட்டின் தொடக்கம் காணப்படவில்லை. மாகறல் சிவன் கோயிலுக்கு ஊர் நிலமும் ஒரு வாணியன் அளித்த நிலமும் தானமளிக்கப்பட்ட பொன்னுக்கு வட்டியும் சேர்த்து மொத்தமும் சண்டிகேசுவரரிடம் கொடுக்கப்பட்டன என்று கல்வெட்டுக் கூறுகிறது.

கல்வெட்டு எண் – 2

அரசு பரம்பரை	:	சோழர்
அரசன் பெயர்	:	2–ஆம் குலோத்துங்க சோழன்
ஆட்சி ஆண்டு	:	11
கல்வெட்டு காலம்	:	கி.பி.1144
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயிலின் கருவறையின் கிழக்குச் சுவர்

செய்திச் சுருக்கம்

மெய்க்கீர்த்தி : இரண்டாம் குலோத்துங்க சோழனின் மெய்க்கீர்த்தி அவனுடைய பெருமைகளைப் பகர்கின்றது, திருப்பொன் அளிக்கும் பூமகள் சேர்ந்துள்ளாள். கலைமகள் நலம் பல நல்குகிறாள். வெற்றி மகளான கொற்றவை வெற்றியைப் பெறும் புயத்தினில் இருக்கிறாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அயலவர்கள் இவனிடம் வந்து இறைஞ்சுவர். மணிமுடியைக் கவித்துக் கொண்டு ஞாலத்தினருக்கும் அனைத்துயிருக்கும் நன்மை புரிபவன். வெண்குடைக்கீழ் செம்பொன் செங்கோல் ஓச்சிக் கொண்டு உயர்ந்த பொன்னால் இழைக்கப்பட்ட வீரசிம்மாசனத்தில் தம்முடைய அரசி புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்து அருள்புரிகிறான்.

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் உள்ள எயிற்கோட்டத்தைச் சேர்ந்த மாகறல் நாட்டின்கண் உள்ள மாகறல் ஊரின் ஆளுடையார் திருவகத்தீசுவரம் உடையார் திருவிளாகம் பெரும்பற்றப் புலியூரில் எழுந்தருளி இருக்கும் பொழுது பெரிய உடையார் திருவகத்தீசுவரம் உடையாருக்கு தேவதான நிலங்கள் இறையிலியாக அளிக்க என்று ஆணையிடப்பட்டது.

அதற்கேற்றவாறு எயிற்கோட்டத்து மாகறல் நாட்டில் உள்ள இருமரம் என்கிற குலோத்துங்கசோழநல்லூரிலும் காலியூர் கோட்டத்தில் இருக்கின்ற புலிவல நாட்டு வேணாயற் சேரி என்கிற சிவபாதசேகர நல்லூரிலும் நன்சை புன்சை நிலங்கள் தேவதானம் இறையிலியாக அளிக்கப்பட்டன.

இருமரம் என்கிற குலோத்துங்க சோழநல்லூர் :

இரண்டு போகம் விளையும் நிலம் 15 வேலிகள்
ஒரு போகம் விளையும் நிலம் 24 வேலிகள்

வன்புன்சை நிலம் 4 வேலிகள்.
ஆக மொத்தம் நிலம் 43 வேலிகள்.

இரண்டாவது ஊர் வேணாற்சேரி என்கிற சிவபாதசேகர நல்லூரில் அளிக்கப்பட்ட நிலங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு போகம் விளையும் நிலம் 5 வேலிகள்

இரண்டு போகம் விளையும் நிலம் 24 வேலிகள் மொத்தம் 29 வேலிகள்

புஞ்சை நிலம் 6 வேலிகள்

ஆக மொத்த நிலம் 35 வேலிகள்

இரண்டு ஊர்களின் தான நிலங்கள் 78 வேலிகள்

இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டவர்கள் இரண்டு நிலவருவாய் அலுவலர்கள். அவர்கள் புரவரி சிகரண நாயகம் இறையூருடையான். புரவரிசிகரண நாயகம் இறையான் குடி கிழவன்.

கல்வெட்டு எண் – 3

அரசு பரம்பரை	:	சோழர்
அரசன் பெயர்	:	2–ஆம் இராசராச சோழன்
ஆட்சி ஆண்டு	:	10
கல்வெட்டு காலம்	:	கி.பி.1156
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயிலின் கருவறையின் தென்புற ஜகதி

செய்திச் சுருக்கம்

இந்தக் கல்வெட்டில் இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தி துவக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

மெய்க்கீர்த்தி : கடலால் சூழப்பட்ட பார்மாதரும் திருமகளும் போர் நிறைந்த கொற்றவையும் அமர்ந்து வாழ நான்கு கடல்கள் சூழ்ந்த ஏழு பூமியும் கடலினைப் போன்று புகழைப் பரப்ப ஆதி உலகம் என்ற சோதி முடி அணிந்து கொண்டு ஆறு சமயங்களும் நன்னெறியில் நின்று அரசாட்சி செய்ய பாண்டியர் சேரர் சிங்களர் ஆகிய மன்னர்கள் வந்து திறை செலுத்தி வணங்கி நிற்க செங்கோல் பார்மீது செலுத்தி செம்பொன்னால் இழைக்கப்பட்ட வீர சிங்காதனத்தில் உலகுடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முக்கோக்கிழாரோடு வீற்றிருக்கிறார் கோப்பர கேசரி பற்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராசராச தேவர்.

செயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்து ஏரிக்கீழ் நாட்டுக் குண்டி ஆற்றூர்த் தண்டலத்து ஊரவர்களான மழவங் கூத்தங் களியநும், வெண்கிழவன் நம்பி உதையஞ் செய்தானும், மதிதி செல்வன் கூத்தனும், சோபுவானா வலியனும், கல்லை கிழவன் திருவன் உடையானும், குண்டி ஆற்றுத் தண்டலத்து திருவையாறன் நாவலயனும், இவ்வூரினன் அத்தியூரன் பிச்சனும், வண்ணக்கன் ஆதித்த தேவன் ஒற்றி கொண்டானும், மத்தி பெற்றான், உதையஞ் செய்தானும் சேர்ந்து சுருட்டில் எல்லையில் மங்கலங்கிழான் திருவன் செல்வன் என்பவன் நீர்பங்கு தொடர்பான வழக்கில் பிணக்கினபோது இந்த மங்கலங்கிழான் பிரமாதி என்பவன் இறந்துவிட்டான். இந்த இறப்பிற்கு பிரயாசித்தம் விதிக்கப்பட்டது.

அதன்படி திருமாகறல் ஆளுடையார் திருவகத்தீசுமுடையார்க்கு சூரிய சந்திரர்கள் உள்ளவரையிலும் ஒரு திருநுந்தா விளக்குவைத்தனர் குண்டி ஆற்றுத் தண்டலத்து ஊரார்கள். மேற்படி விளக்கு எரிக்க அவர்களுடைய ஊரில் கீழ்க்கழனியில் திருவுலகளவின்படி பன்னீரடி கோலால் ஓர் ஆயிரம் குழி அளித்தனர். இந்த நிலத்திற்கு எல்லைகளாகப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர். கிழக்கு எல்லை மேழி முடொங்குக்கும் புறக்கிணறு; தென் எல்லை சுருட்டில் எல்லை; மேற்கு எல்லை வெண்டியன் கிழவன் கூத்தன் பட்டியும் ஊர் நிலம் குளகுந்தன் பட்டியும்; வடவெல்லை கல்லை கிழான் மாதையன் வலை முக்காற் பட்டி ஆகியன. அந்த நிலத்தையே பிரித்து முக்காற்பட்டி கீழ் மூன்றும் கூத்தன் பட்டிக் கிழக்கடைக்கு இறும்புறக் கிணறு குழி ஐந்நூறும் ஆக மொத்தம் ஆயிரம் தடியாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டு எண் – 4

அரசு பரம்பரை	:	சோழர்
அரசன் பெயர்	:	--
ஆட்சி ஆண்டு	:	--
கல்வெட்டு காலம்	:	கி.பி.12–ஆம் நூற்றாண்டு
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடக்கு ஜகதி.

செய்திச் சுருக்கம்

நில விற்பனையைத் தெரிவிக்கும் இரண்டுத் துண்டுக் கல்வெட்டுகள். நிலம் இருப்பிடமும் எல்லைகளும் ஆவணத்தில் கூறப்பட்டிருப்பினும் கல்வெட்டுச் சிதைந்துள்ளதால் தெளிவில்லை. ஆயினும் சில செய்திகள் நமக்குத் தெரிகின்றன. இராஜேந்திர சோழ விண்ணகர். ஆழ்வான் பட்டுடல் மற்றும் மூங்கிற்பட்டுடல் என்ற ஊர்கள். ஏற்றதலை மற்றும் வழிபோக்கு, மனையும் மனைப்படப்பையும் சேர்ந்த ஐம்பது கோல் வேலி நிலம், இந்த நில விற்பனைக்குக் கையெழுத்திட்டவர்கள்

- கந்தாடைகோவிந்த பட்டன்
- கந்தாடை திருவரங்க பட்டன் மற்றும்
- கந்தாடை நாராயண பட்டன்.

வேறு ஒரு நில விலை ஆவணத்தில் மாகறல் எல்லை என்றும் நீரோடும் கால் என்றவை மட்டும் சிதைந்து மீதமாக நிற்கிறது. கையெழுத்தில் ஒருவருடைய பெயர் வளையமழகியான் மட்டும் தெரிகிறது.

கல்வெட்டு எண் – 5

அரசு பரம்பரை	:	சோழர்
அரசன் பெயர்	:	3–ஆம் குலோத்துங்கன்
ஆட்சி ஆண்டு	:	32, 356 –ஆம் நாள்
கல்வெட்டு காலம்	:	கி.பி.1211
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடக்கு சுவர் மற்றும் பட்டி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்திச் சுருக்கம்

வீர அபிஷேகமும் வெற்றி அபிஷேகமும் செய்து கொண்ட திரிபுவன சக்ரவர்த்தி என்றழைக்கப்படும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியில் நந்திபன்மன் என்று அழைக்கப்பட்ட ஓர் அதிகாரி தேவதான நிலமானது யாருக்குப் பற்றாக வேண்டும் என்று ஆணையிட்டான்.

ஜெயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டில் இருக்கும் மாகறல் என்ற ஊரில் திருவகத்தீசுரமுடையார் என்ற சிவன் கோயில் இருக்கிறது. மேற்படி மண்டலத்தில், கோட்டத்தில் இருக்கின்ற

இருமரம் என்ற குலோத்துங்க சோழ நல்லூரின்கண் விளை நிலம் 30 வேலியும்,

ஏரி உள்பட 5 வேலியும் கொல்லை நிலம் 5 வேலியும், ஆக குலோத்துங்க சோழநல்லூரில் மொத்தம் 40 வேலிகள்

இதே மண்டலத்ததைச் சேர்ந்த காலியூர்க் கோட்டத்தில் உள்ள
வெண்கற்சேரியில் நிலம் 30¾ வேலியும்,
ஊர் நத்தமும் கொல்லையும் 11 வேலியும்
இவை பழந்தேவதானம் என்றும் இந்த 41¾ வேலியும் இறையிலி என்றும் கூறப்படுகிறது.

பழையபடியே இந்த தேவதானம் இந்த அகத்தீசுவரர் கோயிலுக்கு இறையிலியாக இருக்க வேண்டும். இந்தக் கோயிலும் இந்த தேவதானமும் காலிங்கராயன் என்பவனுக்கு பற்றாக வேண்டும் என்று ஆணையிடப்பட்டதை திருமந்திர ஓலை இராசநாராயணன் மூவேந்த வேளான் என்பவன் எழுதினான். இந்த ஆணைக்கு சான்று கூறும் வகையில் கையெழுத்திட்டவர்கள்:

1. வில்லவராயன் 2. வாணாதிராயன் 3. தொண்டைமான்
4. விழிஞுதரையன் 5. சிங்களராயன் 6. சித்தராயன்
7. காடவராயன் 8. அங்கராயன் மற்றும்
9. இலாடத்தரயன் பற்றாக என்றதால் இந்த ஆணையில் தெரிவிக்கப்பட்ட வகையறாக்கள் காலிங்கராயனுக்கு உரிமையானவர்கள். காலிங்கராயன் அரசுக்கு ஏதோ நன்மை செய்திருக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டு எண் – 6

அரசு பரம்பரை : சோழர் ஆட்சி ஆண்டு : 5

அரசன் பெயர் : 3–ஆம் இராசராச சோழன் கல்வெட்டு காலம் : கி.பி.1221

(A Concordance of the names in the Chola inscriptions Volume -2; Page 750)

எழுத்து : தமிழ்

இடம் : ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடக்குபக்க ஜகதி

செய்திச் சுருக்கம்

மூன்றாம் இராசராச சோழனின் 4–ஆம் ஆட்சியாண்டில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து காலியூர் கோட்டத்து பாகூர் நாட்டு உக்கல் என்ற விக்கிரமாபரண சதுர்வேதிமங்கலத்து மகாசபையினர் உக்கலின் சிற்றூரான ஸ்ரீகிருஷ்ணசேரியும் குளங்களும் நிலமும் கொல்லையும் நத்தமனையும் மனைப்படப்பையும் அதில் இருக்கின்ற மரங்களும் கிணறும் நீர் பாய்ச்சலும் வழியும் வழிப்போக்கையும் விற்றனர். இந்தச் சொத்துகளை வாங்கியவர் இதே மண்டலத்தைச் சேர்ந்த ஈக்காட்டுக்கோட்டத்துக் காக்கலூர் நாட்டில் அடங்கிய செலையில் இருக்கும் வாணிகன் படம்பாக்க நாயகன் அழகிய பெருமாள் என்பவராவார். ஸ்ரீகிருஷ்ணசேரியை அவன் விற்கவும் ஒற்று வைக்கவும் தானங்கள் செய்யவும் ஊர்க்கணக்கு ஆசுகவிகளும் பண்டோடு பழைய முறைகள் எல்லாம் காணியுடைய வாணிகன் படம்பாக்க நாயகனே செய்ய உரிமை பெற்றவராவார். சொத்தின் விலை அன்றாடு நற்பழங்காசு 80 ஆகும். இந்தத் தொகையை அவணக்களறியில் கணக்கேற்றி அந்த செலவு போக மீதி தொகைப் பெறப்பட்டது என்பர்.

விற்றச்சொத்திற்கு எல்லைகள்: விற்கப்பட்ட ஊரான ஸ்ரீ கிருஷ்ணசேரி உக்கலுக்குக் கிழக்கில் உள்ளது. ஸ்ரீகிருஷ்ண சேரிக்குக் கிழக்கு எல்லை வயலையாற்று எல்லை; தென்மேற்கு எல்லை மாகறல் ஏரிக்குப் பாய்ந்த ஆற்றுக்கால்; வடக்கு எல்லை மேற்கூறப்பட்ட ஆற்றுக்கால் ஆகியனவாகும்.

இந்த நிலவிற்பனையில் எந்தவகையான கலனும் இல்லை. அப்படி கலன் இருப்பதாகத் தெரிந்தால் ஊர் மகா சபையோரே அதைத் தீர்த்து கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த நில விற்பனை அரசனின் 4–ஆம் ஆட்சியாண்டில் ஓலையில் எழுதப்பட்டது. பின்பு ஓராண்டுக் கழித்து இந்த விற்பனை கல்லில் வெட்டப்பட்டது என்று இந்தக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்தச் செயல் திருவாய்க் கேள்வி முன்னதாக நடைபெற்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த விலையாவணத்தைச் சபை ஆணையிட உக்கலின் மத்யஸ்தன் பெருங்குறி உக்கலுடையான் திருவத்தியூராழ்வான் சூரிய தேவன் என்பவர் எழுதினார்.

சாட்சி கையெழுத்திட்டவர்கள்

1. பிரயாகை கேவச பட்டன்
2. பிரயாகை கேசவ பட்டன்
3. பிரயாகை சிங்கபிரான் பட்டன்
4. பிரயாகை வெண்ணெய்க் கூத்த பட்டன்
5. பிரயாகை அருளாள பட்டன்
6. காராம்பிச்செட்டு அருளாள பட்டன்
7. பிரயாகை இளைய சீராம பட்டன்
8. பிரயாகை இளைய திருவாக்குலப் பட்டன்
9. பிரயாகை வரதராச பட்டன்
10. மொட்டைப்புறத்து அத்தாம பட்டன்
11. பிரயாகை சீராம பட்டன்
12. கோட்டூர்ப் பின்போன வில்லி பட்டன்
13. கோட்டூர் வாமன பட்டன்
14. கெங்காதர பட்டன்
15. முடும்பை மதுரைப்பிரான் பட்டன்
16. முடும்பை இராமபிரான் பட்டன்
17. கோட்டூர் ஆட்கொண்டவில்லி பட்டன்
18. மங்கலூர் திருவேங்கட பட்டன்
19. மங்கலூர் கிருஷ்ண பட்டன்
20. மங்கலூர் எக்ஞமூர்த்தி பட்டன்
21. முடும்பை நாராயண பட்டன்
22. ஒதிமுக்கில் நாராயண பட்டன்
23. பிரயாகை நந்த கோபால பட்டன்
24. பிரயாகை எக்ஞநம்பி பட்டன்
25. பிரயாகை திருவாக்குல பட்டன்
26. அட்டாம புறத்து தேவராச பட்டன்
27. ஐயக்கிச்சிய்யம்தாதன்
28. அரணைபுறத்து ஸ்ரீகிருஷ்ண பட்டன்
29. அரணைபுறத்து வெண்ணய் கூத்த பட்டன்
30. கண்டேற்று இளைய பள்ளிக் கொண்டான் பட்டன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

31. கண்டேற்று வீரநாராயண பட்டன்
32. கொட்டி ஆட் கொண்டவில்லி பட்டன்
33. கண்டேற்று ஸ்ரீ கிருஷ்ண பட்டன்
34. கண்டேற்று கேசவ பட்டன்
35. கண்டேற்று பொருளாள பட்டன்
36. வெண்ணெய்க் கூத்த பட்டன்
37. கண்டேற்று இளைய கிருஷ்ண பட்டன்
38. கண்டேற்றுக் கோலவராக பட்டன்
39. பாடகத்து உலோக ஸாசிபட்டன்
40. கண்டேற்று சூரிய பட்டன்
41. கண்டேற்று ஆளவந்தான் பட்டன்
42. பிரயாகை கோவிந்த பட்டன்
43. மொட்டைபுறத்து இளைய வாமன் பட்டன்
44. மொட்டைபுறத்து ஸ்ரீ கிருஷ்ண பட்டன்
45. மொட்டைபுறத்து இளைய அத்தாம பட்டன்
46. கண்டேற்றுப் பள்ளிகொண்டான் பட்டன்
47. பிரயாகை இராமபிரான் பட்டன்
48. பிரயாகை திருவேங்கட பட்டன்
49. பிரயாகை நின்ற நாராயண பட்டன்
50. ஐயக்கின் கேசவ பட்டன்
51. பிரயாகை நாராயண பட்டன்
52. செருப்பள்ளி மாதேவபட்டன்
53. மொட்டைபுறத்து திருவேங்கட பட்டன்
54. மொட்டைபுறத்து வாமன பட்டன்
55. இக்குடி திருவேங்கட பட்டன்
56. பாடகத்து நந்த கோபால பட்டன்
57. பிறாந்துார் அருளாள பட்டன்
58. வங்கிப்புறத்து ஐயப்பிள்ளை
59. செருப்பள்ளி பற்பநாப பட்டன்
60. உக்கலுடையான் அருமபிரான்
61. உக்கல் சிவப்பிராமணன் குனிக்கும் பிரான் பட்டன்
62. சிவப்பிராமணன் ஆண்டான் பட்டன்
63. உக்கல் திருவடிப் பிடிக்கும் பிரான் புறத்து ஸ்ரீகிருஷ்ண பட்டன்
64. நாபிதன் கைத்தான்
65. தட்டான் சீருடை கழலாசாரி
66. உக்கல் தச்ச நாராயணன் திருவகத்தியான ஆயிரத்திருநூற்றுவ ஆசாரியான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

67. கருமான் அத்தாணி செல்வன்
68. மாகறல் நெற்குன்ற கிழான் புலியன் திருவிருந்த பெருமாள்
69. மாகறலில் ஊரங்கிழான் திருப்போர் திருவகத்திசுரமுடையான்
70. வானவன் விழுப்பரையன்
71. ஊரங்கிழான் வளவ மூவேந்த வேளான்
72. ஏனாதி கிழவன்
73. பட்டியர் போசன் அருளாளன்
74. சிவப்பிரமாணன் நாற்பத்தெண்ணாயிர பட்டன்
75. கோயிலான் தேவப்பெருமாள்
76. உக்கல் ஊர்க்கணக்கு மாகறல் உடையான் அரசன்
77. வயலையாற்றூர்ச் சிங்களத்தரயன்
78. நிலமங்கல முடையான அண்டி
79. மங்கல முடையான் செந்தாமரைக் கண்ணன் உய்ய வந்தான்
80. உக்கல் பள்ளி உடையான்
81. இலுப்பை மரக்கிழான் உபையாதித்தன்
82. உக்கல் வெண்ணெய் நல்லூழான் திருவையாறுடையான் மதுரவாசகன் உக்கல் மத்யஸ்தன் உக்கலுடையான் திருவத்தியூராழ்வான்.

மத்யஸ்தன் ஊர் விற்பனை ஆவணத்தை எழுதி சாட்சியாகவும் கையெழுத்திட்டுள்ளான். ஆவணத்தை எழுதியவன் என்ற பொழுது பெருங்குறி என்று சொல்லிக் கொள்ளும் மத்யஸ்தன் இறுதி கையெழுத்தில் பெருங்குறி என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

இந்த ஆவணத்தில் ஊர்மக்களும் ஊர்த் தொழிலாளிகளும் கையெழுத்திட்டுள்ளனர்.

கல்வெட்டு எண் – 7

அரசு பரம்பரை	:	பாண்டியர்
அரசன் பெயர்	:	முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்
ஆட்சி ஆண்டு	:	7, 194ஆம் நாள்
கல்வெட்டு காலம்	:	கி.பி.1257
எழுத்து	:	தொடக்க ஒன்றரை வரி வடமொழி மீதம் தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மண்டப மேற்குப் புறபட்டி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்திச் சுருக்கம்

மெய்கீர்த்தி: சுந்தர பாண்டியனின் மெய்க்கீர்த்தி வட மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. வடமொழியில் சுந்தர பாண்டியன் சந்திர குலத்தின் திலகம் என்றும் மதுராபுரியின் மாதவன் என்றும் கேரளத்தை அழித்தவன் என்றும் பலபட புகழப்பட்டுள்ளான். மேலும் மகாராஜா திராஜ பரமெஸ்வரன் என்றும் திரிபுவனசக்கரவர்த்தி என்றும் மெய்க்கீர்த்தி புகழ்கிறது.

எயில் கோட்டத்து திருமாகறல் திருவகத்தீசுவரமுடைய நாயனார்க்கு சுந்தர பாண்டியன் நாளுக்கும் பூஜைக்கும் அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட தேவையானவைகளுக்காக உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்துக்குப் பற்றான வங்காரத்து ஊரார்க்கு பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த முத்தூற்று கூற்றுநாட்டு அந்தணூர்ச்சிறுகம்பூர் வண்டுவராபதி வீற்றிருந்தானான பழந்தியராயன் என்பவன் பலவரிச் சலுகைகளைக் கொடுத்துள்ளான். அதாவது வங்காரத்தின் நான்கு எல்லைக்குள் இருக்கின்ற நன்சை புஞ்சை இவைகளுக்கு செலுத்தப்படும் கடமை, பொன்வரி, வினியோகம், ஆயவகைகள் அடங்க சர்வமான்யங்களும் தேவதான இறையிலியாகக் கொடுத்து வரியிலும் கழிப்பதாகச் சொல்லியுள்ளான். இந்த தானத்தைக் கோயில் தானத்தார்களிடமே கொடுத்தான். வங்காரத்து ஊரின் நான்கு எல்லைகளிலும் திருசூலக்கற்கள் நடப்பட்டு இந்த ஆவணம் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளச் செய்தான். இந்த தானம் மட்டுமில்லாமல் தானம் அளிக்கப்பட்ட வங்காரமான சுந்தரபாண்டிய நல்லூரில் இருக்கின்ற வினாயகப் பிள்ளையாருக்கு தேவதான நிலம் இரண்டாயிரத்து முந்நூற்று நான்கு குழி; அழிசவூர் உடையார் அருளாளீசுவரம் உடைய நாயனார்க்கு தேவதான நிலம் தொள்ளாயிரத்து ஐம்பது குழி; மடப்புறமாக அளிக்கப்பட்ட நிலம் இருநூறு குழி; வரதராச விண்ணகர் எம்பெருமானுக்குத் திருவிடையாட்டமாகக் கொடுக்கப்பட்ட நிலம் நானூறு குழி; பிடாரி பட்டியாக நிலம் நூற்று நாற்பத்து ஆறு; ஆகமொத்தம் அளிக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு நாலாயிரம் குழி ஆகும். இந்த தானம் சூரியனும் சந்திரனும் உள்ளளவும் நடைபெற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டு எண் – 8

அரசு பரம்பரை	:	தெலுங்கு சோழர்
அரசன் பெயர்	:	விஜய கண்ட கோபாலன்
ஆட்சி ஆண்டு	:	22
கல்வெட்டு காலம்	:	கி.பி.1272
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் தென்பக்க ஜகதி

செய்திச் சுருக்கம்

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்தில் உள்ள மாகறல் நாட்டு மாகறல் என்றழைக்கப்படும் ஊரில் உள்ள திருவகத்தீசுவரம் உடைய நாயனார் கோயிலுக்கு ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு மாகறலில் வாழும் ஊரங்கிழான் நாயகன் சாமுண்டி தென்னவன் என்பவன் இக்கோயிலில் காணியுடைய திருவுண்ணாழிகைச் சபையாரிடம் கழஞ்சே அரைக்கால் பொன் அளித்தான். இந்த விளக்கை சூரிய சந்திரர் உள்ளளவும் எரிப்போம் என்று திருவுண்ணாழிகை சபையார் ஒப்புக்கொண்டனர்.

கல்வெட்டு எண் – ୨

அரசு பரம்பரை	:	தெலுங்கு சோழர்
அரசன் பெயர்	:	விஜய கண்ட கோபாலன்
ஆட்சி ஆண்டு	:	40
கல்வெட்டு காலம்	:	கி.பி.1290
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடக்கு பட்டி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்திச் சுருக்கம்

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்ற ஊரில் எழுந்தருளியுள்ள உடையார் திருவகத்தீசுவரமுடைய நாயனார்க்கு அயணபிரான் கிழவன் காங்கேயராயன் ஊர்ச்சபையாரிடம் தேவதானம் அளித்துள்ளான். ஊரின் பெயர் தண்டலம் என்று தெளிவில்லாமல் பொறிந்து காணப்படுகிறது. மற்றும் கல்வெட்டுச் சிதைந்துள்ளதால் தான நிலமும் அதன் எல்லைகளும் தெளிவாகத் தெரியவில்லை.

கல்வெட்டு எண் – 10

அரசு பரம்பரை	:	சோழ அரசர்
அரசன் பெயர்	:	--
ஆட்சி ஆண்டு	:	--
கல்வெட்டு காலம்	:	கி.பி.13ஆம் நூற்றாண்டு
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடக்கு உபானம்

செய்திச் சுருக்கம்

இவை இரண்டும் துண்டுக் கல்வெட்டுகள். நாள்தோறும் குறுணி அமுது படியும் கறியமுதும் தவறாமல் படைக்க வேண்டும் என்பதற்காக தன்மம் அளிக்கப்பட்டுள்ளது. பரிவட்ட காணிக்கைக்காக இருபது பணம் கொடுக்க வேண்டும் என்று ஒரு துண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மற்றொரு கல்வெட்டு தெரிவிப்பது: முத்தியன் பிச்சன் என்ற ஒருவன் ஒரு திருநந்தா விளக்கு கோயிலுக்கு அளித்தான். அதற்காக வரையான் சூன்றி வேங்கடம் மற்றும் ஊரவர்களும் சேர்ந்து பொன் ஒன்பது கழஞ்சே நாலுமாவும் பெற்றுக்கொண்டு நில விற்பனை செய்துள்ளனர். விற்ற நிலத்திற்கு எல்லைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. விற்ற நிலத்திற்கு கிழக்கு எல்லை மருத்த கீர நெழுவ நாகனுடையானுக்கும் பிராட்டிக்கும் குட்டி நங்கை என்று தெளிவற்றுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேற்கு எல்லையாவன மாதேவன் முத்திசெறுவும் தாமடி நங்கை நிலமும் ஆகும். வடக்கு எல்லை ஊர் வாய்க்கால். விற்கப்பட்ட நிலத்தின் பெயர் சில மட்டும் தெரிகின்றன. அவை தேவ பெருஞ்சொறுவும் பட்டமும். நங்கைப் பெருஞ்செருவும் குட்டி நங்கையும் ஆகும். விற்ற நிலத்தை அளக்கப்பயன் பட்ட நில அளவு கோலின் பெயர் மாகறல் நில அளவு கோலாகும்.

விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களில் 9 குழியுள்ள கடைசி மனையும் அடங்கும்.

கல்வெட்டு எண் – 11

அரசு பரம்பரை	:	-- ஆட்சி ஆண்டு : --
அரசன் பெயர்	:	--
எழுத்து	:	தமிழ்
கல்வெட்டு காலம்	:	கி.பி 13–ஆம் நூற்றாண்டு புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊருக்கு சுந்தரநல்லூர் என்று பெயரிடுமாறு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளதால் இக்கல்வெட்டு சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்தது என்று கருதலாம்.
இடம்	:	ஈசுவரமுடையார் கோயில் மகாமண்டபத்தின் வடக்குப் பக்க ஜகதி

செய்திச் சுருக்கம்

காய்வான் தண்டலம் என்ற ஊரின் சபையோர் துங்கள் ஊரின் நிலங்கள் சிலவற்றை அன்றாடு வராகன் நற்பணம் நாலாயிரத்து நானூற்றுக்கு விற்றனர். அந்த நிலங்கள் காய்வான் தண்டலத்துத் தென்பாதி மூங்கில்பட்டு, விற்கப்பட்ட நிலங்களின் எல்லைகள் பெருமாள் கோயிலுக்கு மேலைக்குளத்தில் வடகிழக்கு இந்தக் குளத்தின் கரை உட்பட மேற்கு நத்தத்தில் என்று கூறி தெருத்தென்கிழக்கு நொக்கின் ஒழுங்கை வர ஆற்றுப்பாதியாக தெற்கும் தென்எல்லை ஆற்றுப்பாதியாக மேற்றவேலிக் கல்லுக்குக் கிழக்கும் மாகறல் எல்லைக்கு வடக்கு, மூங்கிற்பட்டுடல் வேலிக்கும் வயலூர் எல்லைக்கும், காய்வான்தண்டலத்து தாங்கல் வடகரை அடங்கியது, ஏரிக்கரையும் வானவன் மாதேவி வாய்க்காலும் நத்தத்து எல்லை என்று தெரிவிக்கப்பட்ட நான்கு எல்லைகளுக்கும் உட்பட்ட உடைமையும் தென்பாதி பேரிநத்த நிலமும் ஆகும் என்று விற்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் தெரிவிக்கப்படுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலத்தை வாங்கியவர் பெயர் அழிந்துள்ளது. விற்கப்பட்ட நிலத்திற்கு எந்த கலனும் இல்லை. அப்படி கலன் உண்டு என்று சொன்னால் நாங்களே சரிசெய்து கொடுப்போம் என்று ஊர்ச் சபையினர் கூறியுள்ளனர்.

தச்ச விழுக்காடு என்பதைச் செலுத்தப்பட வேண்டும். விற்கப்பட்ட இந்த நிலங்களுக்கு முன்பெல்லாம் எப்படி நீர் பாய்ந்ததோ அதே வகையில் நீர் பாய வேண்டும். அவர் வாங்கிய நிலங்களில் எங்கு வேண்டுமானாலும் கல்லும் மரமும் நட்டுக்கொண்டு தங்கள் சொத்தைப் பிரித்துக் கொண்டு சுந்தரநல்லூர் என்று பெயர் வைத்துக் கொள்ளலாம் என்று காய்வான் தண்டலத்து சபையார் கல்லில் வெட்டி தெரிவித்துள்ளனர்.

இந்த விலை ஆவணத்தில் பின்வருபவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

1. கந்தாடை நாராயண பட்டன்
2. கந்தாடை ஆண்டபிரான் அருளாள பட்டன்
3. மூர்த்தி பட்டன், கந்தாடை வரதராசபட்டன்
4. உலோசன பட்டன், பவிலகன் .... பட்டன்
5. கந்தாடை அனந்த...
6. கந்தாடை எக்ஞ மூர்த்தி பட்டன்,
7. ராஜபட்டன் , 8..............? 9. ....?
10. வேகம்ப பட்டன்
11. சந்தி நெய் நின்றான்பட்டன்
12. ....? 13. ....?

கல்வெட்டின் துவக்கமும் முடிவும் சிதைந்துள்ளன.

கல்வெட்டு எண் - 12

அரசு பரம்பரை : -- ஆட்சி ஆண்டு : --
அரசன் பெயர் : -- கல்வெட்டு காலம் : கி.பி.13-ஆம் நூற்றாண்டு
எழுத்து : தமிழ்
இடம் : ஈசுவரமுடையார் கோயில் கருவறையின் தென்புற ஜகதி

செய்திச் சுருக்கம்

இது சிதைந்த துண்டுக் கல்வெட்டு, இந்தக் கல்வெட்டில் நிலவருவாய்த் துறையைச் சேர்ந்த மூன்று அலுவலர்களின் பெயர்கள் மட்டும் இருக்கின்றன. அவர்கள் புரவரி சீகரணத்து முகவெட்டி தண்டலங்கிழா(ன்)(1), புரவரி சிகரணத்து முகவெட்டி வடுக்குடையார்(2) மற்றும் புரவரி சிகரணத்து முகவெட்டி நெற்குப்பை உடையான்(3).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டு எண் - 13

அரசு பரம்பரை	:	--
அரசன் பெயர்	:	--
ஆட்சி ஆண்டு	:	--
கல்வெட்டு காலம்	:	--
எழுத்து	:	தமிழ்

கல்வெட்டு காலம்: இரண்டாவது துண்டுக் கல்வெட்டில் இந்தக் கட்டுரையில் வரும் 6ஆவது கல்வெட்டில் வரும் செய்தியும் சாட்சி கையெழுத்திட்டவர்கள் சிலரும் வருவதால் இந்தத்துண்டுக் கல்வெட்டின் காலத்தை மூன்றாம் இராசராச சோழன் காலத்தைச் சேர்ந்தது எனலாம். மற்ற இரண்டுத் துண்டுக் கல்வெட்டுகளும் கி.பி.14–ஆம் நூற்றாண்டு.

செய்திச் சுருக்கம்

மூன்று துண்டுக் கல்வெட்டுகள்.

அ). கால்நடைகள் மேய்ப்பதற்கு மேய்ச்சல் நிலம் மானியமாகக் கொடுத்துள்ளார். அவருடைய பெயர் பொறிந்துள்ளது.

ஆ). பாகூர் நாட்டு உக்கலாகிய விக்கரமாபரணச் சதிர்வேதி மங்கலத்து மகாசபையினர் செலையில் வாணிகனுக்கு விற்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. கையெழுத்திட்டவர்கள் பின்வருமாறு

1. பிரயாகை வெண்ணெய்க் கூத்த பட்டன்
2. மங்கலூர் எக்ஞமூர்த்தி பட்டன்,
3. இளைய பட்டன்,
4. கண்டேற்று கோலவராக பட்டன்
5. பாடகத்து நந்த கோபாலன்
6. வேளான் ஆகியோர்

இ) புலியூர் கோட்டத்தில் ஏதோ பாக்கத்தில் முந்நூற்று அறுபது குழி நிலம் விற்கப்பட்டதைத் தெரிவிக்கிறது. கல்வெட்டுச் சிதைந்துள்ளதால் தெளிவாக இல்லை .

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கல்வெட்டு எண் – 14

அரசு பரம்பரை	:	விஜயநகர பேரரசு
அரசன் பெயர்	:	கம்பண உடையார்
ஆட்சி ஆண்டு	:	கீலக ஆண்டு ஆடி திங்கள்
கல்வெட்டு காலம்	:	கி.பி.16–ஆம் நூற்றாண்டு
எழுத்து	:	தமிழ்
இடம்	:	ஈசுவரமுடையார் கோயிலின் திருச்சுற்றுச் சுவர்படி

செய்திச் சுருக்கம்

திருமாகறல் உடைய நாயனார் கோயிலின் தானத்தார்கள் புவனேகபாகு தேவருடைய மகனான அழகிய திருச்சிற்றம்பலம் உடையாருக்கு வடக்கண் கண்காணியாக ஆட்சி செய்வதற்காக நிலங்களும் இவ்வூரில் இருக்கின்ற மடத்திற்குக் கிழக்கில் இருக்கின்ற சம்பந்தனார் கோயிலுக்குத் தெற்கில் மனைக்கோல் இரண்டும் வீட்டு மனையும் மனையின் தோட்டமும் அளிக்கப்பட்டன. மேலும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் ஒரு நாளைக்கு குறுணி நானாழி நெல்லும் ஓர் ஆண்டுக்கு நாலு அரைப் பணமும் திருமாகறல் உடையார் நாயனார் கோயில் தானத்தார்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த தானம் சூரிய சந்திரன் இருக்கும் வரையும் நடக்க வேண்டும் என்று இந்த காணி அளிக்கப்பட்டது. இந்த தானத்தை கோயில் தானத்தார்கள் செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொடுத்தனர். இதற்கு மூவர் கையெழுத்திட்டுள்ளனர்.

1. நாகப்பன் கண்ணபிரபட்டன்
2. பன்மகேஸ்வர பட்டன்
3. கச்சி ஏகம்ப பட்டன்

பயன்பட்ட நூல்கள் :

1. *காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் பதிப்பு 2006 வெளியீடு : தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பக்கம் 81 – 105*
2. *South - Indian Inscriptions, Volume - VII*
3. *A concordance of the names in the chola inscriptions volume-2; Page - 750*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. வழிபாடுகள் & மாசிமகப் பெருவிழா விவரம்

பெருவிழா நாள் வரிசை எண்.	பகல் விழா	இரவு விழா
		கிராமதேவதை கேடய உற்சவம்
		விநாயகர் ஆகுவாகனம்
1	துவஜாரோகணம் அதி காலை	இடபவாகனம்
2	சூரிய பிரபை	சந்திரபிரபை
3	பூத வாகனம்	மாவடிசேர்வை
4	கேடய உற்சவம்	நாகவாகனம்
5	அதிகார நந்தி	திருக்கல்யாண உற்சவம் அம்பாள் தவத்திற்கு எழுந்தருளல் வசந்த உற்சவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6	இடபவாகன காட்சி	யானை வாகனம்
7	திருத்தேர் மாலை 5.00 மணியளவில் படிதீபாராதனை	
8	பிச்சாடனர் உற்சவம் மாலை 4.00 மணியளவில்	குதிரைவாகனம்
9	கேடய உற்சவம்	இராவணேஸ்வரர் வாகனம்
10	நடராசர் சேர்வை தீர்த்தவாரி	அவரோகனம் பஞ்சமூர்த்தி புறப்பாடு
11		இடபவாகன உற்சவம் ஊடல் உற்சவம்
12		உற்சவசாந்தி வசந்த உற்சவம்
13		உற்சவசாந்தி வசந்த உற்சவம்
14		உற்சவசாந்தி

குறிப்பு:

பிரதோஷ வழிபாடு, சங்கடஹர சதுர்த்தி, கிருத்திகை, அமாவாசை, பௌர்ணமி, ஆடி ஐந்து வெள்ளிக்கிழமையில் அம்பிகை காலை திருமஞ்சனம் மாலை, மஞ்சள், சந்தனம், குங்குமம், பஞ்சவர்ணகாப்பு ஊஞ்சல் சேவை, ஐப்பசி அன்னாபிஷேகம், நடராசர், மார்கழி திருவாதிரை விழா, மகாசிவராத்திரி மற்றும் மாகறல் சிவனடியார் திருக்கூட்ட மன்றத்தின் சார்பாக நால்வருக்கும், தெய்வச் சேக்கிழாருக்கும் குருபூஜை விழா நடைபெறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. (1). திருப்பணிகள்

1. இரண்டாம் குலோத்துங்க சோழன் (ஆட்சி கி.பி.1133–1150) கட்டிய திருக்கோயில்.
2. மாகறல் உள்ளிட்ட பொதுமக்கள் கூட்டு முயற்சியால் இராஜகோபுரத்திருப்பணிக்கு முதன் முதலாக 13–12–1962 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. திருப்பணி நிறைவடைந்து திருக்குட முழுக்கு 31–01–1971 அன்று நடைபெற்றது. திருபணிகளை ஒருங்கிணைத்தவர்.
    1. திரு.எம்.எஸ்.சாரங்கபாணி முதலியார், ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை.
    2. திரு.எம்.எஸ்.அருணாச்சலமுதலியார், திருப்பணி குழுத்தலைவர், (பேங்கர், வேலூர்)
    3. திரு.எம்.டி.நடராஜன்முதலியார், திருப்பணிக்குழு பொருளாளர் மற்றும் பரம்பரை அறங்காவலர்.
3. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் பொன்விழா ஆண்டு நினைவு திருப்பணியாக நால்வர் சந்நிதி அமைத்து நால்வர் பிரதிட்டை செய்ததும் திருக்குட முழுக்கு விழா எடுத்ததுமான ஆண்டு 1985.
4. திருக்குட முழுக்கு விழா 09–12–2001.

5 (2) சொத்து விவரம்

1. மாகறல் பஞ்சாயத்து எல்லையில் நஞ்சை & புஞ்சை நிலங்கள் மொத்தப்பரப்பு 74 ஏக் 48 செண்ட்.
2. அடிமனை வாடகை வரவு /– 10 கடைகள் மற்றும் 30 குடிசை வீடுகள்

பயன்பட்ட நூல் :

காஞ்சிபுரம் மாவட்டத் தொல்லியல் கையேடு பதிப்பு–2008 இரா.சிவானந்தம்

வெளியீடு : த.நா.அ. தொல்லியல் துறை, சென்னை. பக்கம் : 177

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. (3) பரம்பரை அறங்காவலர்கள்

1. ராஜி முதலியார்
2. அருணாசச்சல முதலியார்
3. எம்.எஸ்.துரைசாமி முதலியார் – 1915 – 1945
4. எம்.எஸ்.ஏ.சண்முக முதலியார் – 1945 – 1951
5. எம்.டி.நடராஜன் முதலியார் – 1952 – 2005
6. டாக்டர் நட.துரைராஜன் – 2006

5 (4) ஸ்ரீ காசிமடம் - ஓதுவார் நியமனம்

திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் கட்டளை ஓதுவார் திருமுறை விண்ணப்பம், சிவ சிவ ஒலிமண்டபத்திலிருந்து 07–12–1965 முதல் தொடர்ந்து நிகழ்த்தப்பெற்று வருகிறது. திருமுறை விண்ணப்பத் துவக்கவிழா திரு.M.S.சாரங்கபாணி முதலியார் அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஓதுவா மூர்த்திகள்:

1. சிவ.சொக்கலிங்க ஓதுவார்
2. சிவ. தண்டபாணி
3. சிவ.ப.இராமசந்திரன்
4. சிவ.தியாகு. ஆடலரசு

நந்தி பகவான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6.திருக்கோயில் வரைபடம்



திருக்கோயில் பரப்பு 3 ஏக்கர் 5 சென்ட்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7.வரைபட எண்கள் குறிக்கும் விவரம்

1. கிழக்கு ராஜகோபுரம் (ஐந்து நிலை ஏழு கலசம் 70அடி உயரம்)
2. விநாயகர்
3. பலிபீடம்
4. கொடிமரம்
5. நந்தி
6. நான்குகால் மண்டபம்
7. அக்னி தீர்த்தம்
8. நான்கு கால் மண்டபம் (விநாயகர்)
9. மடப்பள்ளி
10. பூஜைப் பொருட்கள் இருப்பு
11. வழி (தெற்கு)
12. நந்தவனம்
13. அலங்காரமண்டபம்
14. வாகன மண்டபம்
15. தானிய இருப்பு அறை
16. யாக சாலை
17. கிணறு
18. 2வது நுழைவு வாயில்
19. துவார பாலகர்கள்
20. விநாயகர்
21. முருகர்
22. ஆறுமுக சுவாமி (வள்ளி, தெய்வானையுடன்) சந்நிதி
23. நால்வருடன் சேக்கிழார்
24. அதிகார நந்தி
25. அறுபத்து மூவர்
26. வலம்புரி விநாயகர்
27. முருகர், வள்ளி, தெய்வானை
28. கிணறு
29. நடராஜர் சந்நிதி
30. பள்ளியறை
31. காலபைரவர்
32. அருள்தரும் புவனநாயகி அம்மை சந்நிதி
33. நவக்கிரகம்
34. யானை வாகனத்தில் முருகர்
35. சோமாஸ்கந்தர் சந்நிதி
36. கோஷ்ட விநாயகர்
37. தட்சிணாமூர்த்தி சுவாமி
38. மகாவிஷ்ணு
39. பிரம்மா
40. துர்க்கை
41. சண்டிகேஸ்வரர் சந்நிதி
42. தலமரம் (எலுமிச்சைமரம்)
43. உற்சவமூர்த்திகள்
44. பலிபீடம்
45. நந்தி
46. விநாயகர்
47. நுழைவு வாயில்
48. துவாரபாலகர்கள்
49. அருள்மிகு திருமாகறலீஸ்வரர் (உடும்பு வால் போல் சிறுத்தவடிவம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. அருள்பெற்ற அன்பர்



சிவத்திரு
சேலம் கி.சுப்பராய பிள்ளை அவர்கள்
(வயது 91)
(தென்னிந்திய சைவசித்தாந்த சங்க வெளியீடு)
28–02–1960

இப்பெரியவர் தனது 84–ஆம் வயதில் ஒரு விபத்திற்குள்ளானார். இடுப்பின் கீழ்ப்பகுதி செயலற்றுப் போனது. நீண்டகாலம் சிகிச்சை பெற்றும் குணமடையவில்லை. திருமுறையில் கயிறுசார்த்திப்பார்த்தார். பாராயணத்திற்கு மாகறல் பதிகம் வந்தது. மாகறல்வந்து பலமாதங்கள் தங்கியிருந்தார். தவழ்ந்தே வலம்வந்து வழிபட்டு நம்பிக்கையுடன் பதிகம் ஓதிவந்தார். முறிந்த எலும்பு கூடியது; எழுந்து நடமாடும் வலிமையைப் பெற்றார்.

மாகறல் ஈசன் கருணையை அறிந்த பொது மக்கள் வியந்து போற்றினர். அறநிலையத்துறை ஆணையர் திரு உத்தண்டராம பிள்ளை, சிந்தாந்த புலவர் ப.இராமநாத அடிகள் ஆகியோர் முன்னிலை வகிக்கப் பலமன்றங்கள் பெரியவருக்குப் பாராட்டு விழா எடுத்து மகிழ்ந்தன.

பயன்பட்ட நூல்

தேவாரத்தால் ஆகாததும் ஒன்று உண்டா? பதிப்பு–1960, கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார், வெளியீடு: காளத்தி–நடேச முதலியார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. திருக்கோயில் பாடல்கள் அட்டவணை

வ. எண்.	பொருளடக்கம்	பக்கம் எண்.
1.	அருள்பெற்ற அன்பர்	38
2.	திருஞானசம்பந்தர் சுவாமிகள்	40
3.	தெய்வச் சேக்கிழார்	49
4.	வள்ளலார் சுவாமிகள்	49
5.	முனிசாமி முதலியார்	50
6.	பன்னிரு திருநாமங்கள் பெயர்க்காரண விளக்கம் பாடல்கள்	58
7.	அருள்மிகு பொய்யா விநாயகர் துதி	69
8.	அருள்தரும் புவனநாயகி துதி	69
9.	திருமாகறல் பதிற்றுப் பத்து அந்தாதி முன்பதிப்புகள்	70
10.	தலபுராணம் ஆய்வு	70

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. திருஞானசம்பந்தர் சுவாமிகள் அருளிய திருமாகறல் பதிகம்

அவதரித்த தலம்- சீர்காழி காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு

உரை : காஞ்சிபுரம் முனைவர் சிவ.சண்முகசுந்தரம்

திருமுறை–3, பதிகம்–72: திருவிராகம்,– பண்: சாதாரி

திருசிற்றம்பலம்

1. விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை அண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீருமுடனே.

தெளிவுரை

விளைபொருள்கள் மிகுதியாக விளையும் வயல்களில் காணப்படும் எண்ணற்ற உழத்தியர்களின் பாடல், விளையாடல் ஆகியவற்றால் எழும் ஓசைகளையும் மேகமண்டலத்தைத் தொடுமளவில் நீண்ட கொடிகள் உடைய மிகுதியான மாடி வீடுகளையும் நெடிய சோலைகளையும் கொண்டது மாகறல் என்னும் தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், மணம் பரப்பும் கொன்றை மலர்களையும் கங்கையாற்றினையும் வளரும் பிறைச்சந்திரனையும் அணிகலன்களாகத் தம் சிவந்த சடையில் அணிந்தவர். அவர் சிவந்த கண்களுடைய திருமாலாகிய இடப வாகனத்தை உடையவர். அச்சிவபெருமானின் திருவடிகளை அடைக்கலம் அடைந்தவர்களின் கொடிய வினைகள் யாவும் நீங்கிவிடும்.

அருஞ் சொற்பொருள்

விங்கு – மிகுதி; கடைசியர் – உழத்தியர்; அரவம் – ஓசை; மங்குல் – மேகம்; பொழில் – சோலை; கொங்கு – மணம்; செங்கண் விடை – சிவந்த கண்களை உடைய திருமாலாகிய இடபம்; அண்ணல் – சிவபெருமான்; சேர்பவர்கள் – அடைக்கலம் அடைந்தவர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. கலையினொலி மங்கையர்கள் பாடலொலி
ஆடல்கவின் எய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்
இலையின்மலி வேல்நுனைய சூலம்வலன்
ஏந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புனல் ஏந்துபெரு மானடியை
ஏத்தவினை அகலுமிகவே.

தெளிவுரை

கல்வி கற்பவர்களின் ஒலியும் மங்கையர்களின் ஆடல், பாடல் ஒலிகளும் இனிமையாய் இருக்க, மிக்க அழகுடைய மலைகளையொத்த மாடிகளில் உயரமான நீண்ட கொடிகள் அசையும் நிலைமையினை உடையது மாகறல் என்னும் தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், இலையைப் போன்ற வடிவுடைய வேலினையும் கூர்மையான சூலாயுதத்தையும் வலக்கையில் ஏந்தியவர். அவர் நெருப்பு போன்ற நிறம் உடைய சிறிய சடையினுள் அலைகளை உடைய கங்கை நீரைக் கொண்டவர். அவருடைய திருவடிகளைத் துதித்து வணங்க வினைகள் முற்றிலும் நீங்கும்.

அருஞ் சொற்பொருள்

கலை – கல்வி; கவின் – இனிமை, நுனைய – கூர்மையான ; புனல் – கங்கை நீர்.

3. காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
நாகமசை யாவழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
ஏத்தவினை பறையுமுடனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

திருமாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை முனிவர்கள் காலையிலும் மாலையிலும் சங்கு, குழல், யாழ், முழவு ஆகிய இசைக்கருவிகளை இசைத்து மிக்க சிறப்புடன் வழிபாடு செய்து துதித்து மகிழ்வர். அவர், தோலையே ஆடையாக விரும்பி அணிந்தவர்; அதன்மேல் ஒளிபொருந்திய பாம்பையே கச்சையாகக் கட்டியிருப்பவர். அவர், பால் போன்று தூய்மையான வெண்ணிறமுடைய திருநீற்றை மேனியில் பூசியுள்ளவர். அவருடைய திருவடிகளைப் புகழ்ந்து போற்ற வினைகள் உடனே அகலும்.

அருஞ் சொற்பொருள்

துந்துபிகள் – சங்கு, குழல், யாழ், முழவு முதலிய இசைக் கருவிகள்; காமருவுசீர் – மிக்க சிறப்பு; மாதவர்கள் – முனிவர்கள்; உடை – ஆடை; நாகம் – பாம்பு; அசையா – கச்சையாகக் கட்டி; பாலையன நீறு – பாலை அன்ன நீறு, பாலை ஒத்த திருநீறு; புனைவான் – அணிவான்; பறையும் – அகலும்;

4. இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தியெழில் மெய்யுளுடனே
மங்கையரு மைந்தர்களு மன்னுபுனல்
ஆடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையி னானடியையே
நுங்கள் வினை தீரமிக வேத்திவழி
பாடுநுகரா எழுமினே.

தெளிவுரை

ஒளி பொருந்திய முத்துகளையும் பொன்போன்று ஒளிரும் மணிகளையும் அடித்துக்கொண்டு வரும் சேயாற்றில் அழகிய தோற்றப்பொலிவுடைய மங்கையர்களும் மைந்தர்களும் நன்கு நீராடி மகிழும்படியாக மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவர் சிவபெருமான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர் தேன் நிறைந்த கொன்றை மலர்களையும் குளிர்ந்த பிறைச்சந்திரனையும் தம் சிவந்த சடைமுடியில் சூடியவர். உங்களை வினைகள் வந்தடையாவண்ணம் அவருடைய திருவடிகளையே புகழ்ந்து போற்றிப் பணிந்து வணங்கி விரும்பி வழிபாடு செய்வீராக.

அருஞ் சொற்பொருள்

உந்தி – நீரில் அடித்துக் கொண்டு வருதல்; எழில் –அழகு; மெய்யுளுடனே – மெய் உள் உடனே, தோற்றப் பொலிவும் மனமும் உடைய; கொங்கு – தேன்; நுகரா – விரும்பி.

5. துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட
மாடமலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர்மழு வாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி
யாரைநலி யாவினைகளே.

தெளிவுரை

குவிந்த நறுமணமுள்ள கருங்குவளை மலர்கள் விடியற்காலையில் விளங்கித் தோன்றும். அம்மலர்களிலிருந்து தேன் சொரியும்படியாக உள்ள கழனிகளுக்கருகில் மேகங்கள் சூழ்ந்த மலர்ச்சோலைகளில் பல மயில்கள் நடனமாடும் இயல்புடையது மாகறல் என்னும் தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், வஞ்சமிக்க மதம் சொரியும் யானையின் தோலை உரித்துப் போர்த்து மகிழ்ந்தவர்; ஒப்பற்ற மழுவாயுதம் ஏந்தியவர் ; அவர், நஞ்சு உண்டமையால் இருண்ட கழுத்தை உடைய தலைவராவர். அத்தகையவரின் அடியார்களை வினைகள் வந்து துன்புறுத்தமாட்டா.

அருஞ் சொற்பொருள்

துஞ்சும் – குவியும்; நீலம் – கருங்குவளை மலர்; மது – தேன்; மஞ்சு – மேகம்; உரி – தோல்; நஞ்சம் – நஞ்சு; கண்டம் – கழுத்து; நலியாவினை – வினைகள் துன்புறுத்தமாட்டா.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை
யோரிலெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கவுயர்
வானுலகம் ஏறலெளிதே.

தெளிவுரை

முறையாக மறையோதும் அந்தணர்களுடன் தவவேடத்தை உடைய பல முனிவர்கள் ஒன்றுகூடி இனிய வழிபாட்டு முறைகளைச் செய்து வணங்கித் தேவர்களைப் போன்று தோன்றுவர். இத்தகு சிறப்புடையவர்கள் உள்ள மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், மின்னல்போல் ஒளி வீசும் தம் விரிந்த சடைமுடியில் மலர்கள், கங்கை, திங்கள் முதலியனவற்றைச் சூடியவர். அவருடைய திருக்கோலத்தைத் தியானிப்பவர்கள் தம்முடைய பழைய வினைகள் நீங்க சிறப்புடைய வானுலகத்தை எளிதாக அடைவர்.

அருஞ் சொற்பொருள்

மறையோர் – அந்தணர்; படிமம் – தவவேடம்; இறைஞ்சி – வணங்கி; இமையோர் – தேவர்கள்; உன்னுமவர் – தியானிப்பவர்கள்; ஒல்க – நீங்க.

7. வெய்யவினை நெறிகள்செல வந்தணையு
மேல்வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரி கானல்மது வார்கழனி
மாகறலு ளானெழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சியடை
யாவினைகள் அகலுமிகவே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

கொடிய பழைய வினைகள், தாம் வந்தவழியே செல்லவும் வரும் வினைகளாகிய ஆகாமிய வினைகள் வந்து சேராதிருக்கவும் வேண்டும் என விரும்பி வினைகளை விலக்கிட எண்ணுபவர்களே, "மேகங்கள் தழுவுமாறு உயர்ந்து பரந்து விளங்கும் சோலைகளையும் தேன் மிக்குடைய கழனிகளையும் உடைய மாகறல் என்னும் தலத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அழகும் மலைபோன்ற தோற்றமும் உடைய யானையின் தோலை உரித்துத் தம் உடம்பின்மேல் போர்த்துக் கொண்டு அழகுடன் காட்சிதரும் அச்சிவபெருமானின் திருவடிகளை வழிபடுபவர்களுக்கு வினைகள் வந்து சேரா, வினைகள் அஞ்சி விரைவில் அகலும்" என்றறிவீர்களாக.

அருஞ் சொற்பொருள்

வெய்ய – கொடிய; வீட்டல் – விலக்கல்; மை – மேகம்; கானல் – சோலை; கரி – யானை; வரை – மலை; ஐயன் – சிவபெருமான்.

8. **தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு**
தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி ஈசனென ஏத்தவினை
நிற்றலில போகுமுடனே.

தெளிவுரை

பொன்போன்று ஒளிரும் மாடி வீடுகளினின்றும் நூல்துணியாலான நெடிய கொடிகள் மேகத்தைத் தொடும்படியாக விளங்குவதும் மாசற்ற செய்கைகள் மிகுதியாகக் கொண்ட மாதவர்கள் கூடி வேதங்களை ஓதும்படியாகவும் உள்ளது திருமாகறல் என்னும் தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் பாசுபத வேடத்தில் இச்சை கொண்டவர் ; நஞ்சுடைய நீண்ட பாம்பைக் கச்சையாக உடுக்கும் இயல்புடையவர். மிக்க பொலிவு தரும் திருநீற்றை அணிந்த பெருமான் என்றெல்லாம் அவரைப் புகழ்ந்து போற்ற வினைகள் நிற்றல் இல்லாமல் உடனே நீங்கிவிடும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருஞ் சொற்பொருள்

தூசு – நூல்; துகில் – துணி; மாசுபடுசெய்கை – குற்றமற்ற செயல்கள்; பாசுபதம் – சிவபெருமான் மேற்கொண்ட வடிவங்களுள் ஒன்று பாசுபதவேடம் (திருநீறு, சடை முதலியன தரித்த கோலம்). நச்சுரவு – நஞ்சை உடைய பாம்பு; பொடி – திருநீறு (விபூதி)

9. தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு
நீர்குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறலுளான்
சாயவிர லூன்றியஇ ராவணன்
தன்மைகெட நின்றபெருமான்
ஆயபுகழ் ஏத்துமடி யார்கள்வினை
யாயினவும் அகல்வதெளிதே.

தெளிவுரை

தூய்மையான தாமரை, நெய்தல், செங்குவளை, கருங்குவளை முதலிய மலர்கள் விரிய அவற்றிலுள்ள தேனைப்பருகப் பரந்து விளங்கும் வண்டினங்கள் பல்வகையான இனிய இசையினை எழுப்பும் தன்மையுடையது மாகறல் என்னும் தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் இராவணனுடைய வலிமை குறையுமாறு தம்காற்பெரு விரலால் அடர்த்தி அவனை நிலைகுலையச் செய்த பெருமான் என்றெல்லாம் புகழந்து போற்றிப் பணிந்து வணங்கும் அடியார்களின் வினைகள்யாவும் எளிதில் அகலும்.

அருஞ் சொற்பொருள்

கழுநீர் – செங்குவளை மலர்; குவளை – கருங்குவளை மலர்; பண்முரல் – பாடல் போன்ற இனிய இசை; சாய – வலிமை குறைய.

10. காலினல பைங்கழல்கள் நீண்முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலுமல ரானுமறி யாமையெரி
யாகியுயர் மாகறலுளான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி
யாரையடை யாவினைகளே.

தெளிவுரை

சிவபெருமான், தம் திருவடிகளில் அணிந்த நல்ல சிறந்த பொன்னாலான வீரக்கழலையும் திருமுடியிலுள்ள கங்கை, பிறைச்சந்திரன் முதலியவற்றையும் காண பெருவிருப்பம் கொண்ட திருமாலும் பிரமனும் அறியாதவாறு நெருப்புப் பிழம்பாக ஓங்கி உயர்ந்து விளங்கியவர். அவர் எழுந்தருளியுள்ள தலம் திருமாகறல். அத்தலத்து இறைவன், சிரிப்பு, நெற்றிக்கண், கை, திருமேனி ஆகிய நான்கின்கண்ணும் நெருப்புடையவர்; சட்டையை உரிப்பதும் சிறந்த மணியை உடையதுமாகிய நாகத்தை ஆபரணமாக அணிந்தவர்; களிப்புடன் நடக்கும் இடபத்தை வாகனமாகக் கொண்டவர். இத்தகைய சிறப்புடையாரின் அடியார்களை வினைகள் நெருங்கமாட்டா.

அருஞ் சொற்பொருள்

காலின் – திருவடிகளில்; காமுறவினார் – விருப்பமுடையவர்கள்; மாலும் மலரானும் – திருமாலும் பிரமனும்; ளியாகி – நெருப்புப் பிழம்பாக; நாலுமெரி – நாலும் எரி (சிரிப்பு, நெற்றிக்கண், கை, திருமேனி ஆகிய நான்கிலும் நெருப்புடையவர்); தோலுமுரி – தோலை உரிக்கின்ற; ஆலும் – களிப்புடன் நடக்கும்; விடை – எருது (இடபம்); ஊர்தி – வாகனம்.

11. கடைகொள்நெடு மாடமிக ஓங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி
கூடுசம் பந்தனுரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறலுளான் அடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள்
தொல்வினைகள் ஒல்குமுடனே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).

தெளிவுரை

வாயில்களுடன் கூடிய நெடிய மாடங்களையும் மிகவும் உயர்ந்த நறுமணம் வீசுகின்ற வீதிகளையும் உடையது சீர்காழி என்னும் தலம். அத்தலத்தில் வாழ்பவர்களின் தலைவராக விளங்குபவர் திருஞானசம்பந்தர். மடையினின்றும் நீர் ஓடிப்பாயும் வயல்கள் உடையதும் நெருங்கிய சோலைகள் உடையதுமானது மாகறல் என்னும் தலம். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருவடிகளைப் பற்றுதலுக்குரிய முறையில் திருஞானசம்பந்தர், சிவபெருமானின் திருவடிகளையே தம் உடைமையாகக் கொண்ட தமிழால் பரவிப் போற்றிப் பாடியவை இப்பத்துப் பாடல்கள். இவற்றை ஓதி உணர்பவர்களின் தொன்மையான வினைகள் யாவும் உடனே நீங்கிவிடும்.

அருஞ் சொற்பொருள்

கடை – வாயில்; காழியவர் கோன் – சீர்காழி என்னும் தலத்தில் வாழ்பவர்களின் தலைவர் – திருஞானசம்பந்தர்; அரன் – சிவபெருமான்; அடியையே உடைய தமிழ் – திருவடிகளையே தம் உடைமையாகக் கொண்ட தமிழ்; ஒல்கும் – நீங்கும்.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் சுவாமிகள் அருளிய திருமாகறல் பதிகம் நிறைவு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

அவதரித்தத் தலம் - சென்னை குன்றத்தூர் காலம் கி.பி 12-ஆம் நூற்றாண்டு

அங்கண் அமரர் பெருமானைப்
பணிந்து போந்துஆடு அரவினுடன்
பொங்கு கங்கை முடிக்கணிந்தார்
மகிழும் பதிகள் பலபோற்றிப்
மங்கை பாகர் அமர்ந்தருளும்
வயல்மா கறலை வழுத்திப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணில்
முட்டத்தைச் சென்று குறுகினார்.

திருஞானசம்பந்தர் புராணம் பாடல்–984

தெளிவுரை

தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய திருவோத்தூரில் எழுந்தருளிய சிவபெருமானைப் பணிந்து வணங்கிய பின், படமெடுத்தாடும் பாம்புடன் கங்கையாற்றையும் தம்சடை முடியில் அணிந்துள்ள அச்சிவபெருமான் மகிழ்வுடன் எழுந்தருளியுள்ள பல தலங்களையும் வழிபட்டவராய்ச் செல்லும் சம்பந்தர், மாதொருபாகராகிய அவர் இனிதே எழுந்தருள் பாலிக்கும் வயல்கள் நிறைந்த மாகறல் என்னும் தலத்தை வணங்கலானார். அங்கிருந்து நீர்நிலைகளில் தேன்நிரம்பிய மலர்கள் நிறைந்த (குரங்கு, அணில், காகம் ஆகிய மூன்றும் வழிபட்டுப் பேறு பெற்ற) குரங்கணில் முட்டம் என்னும் தலத்தை அடைந்தார்.

4. வள்ளலார் சுவாமிகள் அருளிய திருவருட்பா

அவதரித்தத் தலம் - மருதூர் (கடலூர் மாவட்டம்) காலம் 1823- 1874

–தோயுமன

யோகறல் இலாத் தவத்தோர் உன்ன விளங்குதிரு
மாகறலில் அன்பர் அபிமானமே.

– திருமுறை 1

–விண்ணப்பக்கலிவெண்பா கண்ணி–243

தெளிவுரை

இடையீடு இல்லாது மனதைத் தியானத்திலேயே மூழ்கச் செய்யும் தவச்சீலர்களின் உள்ளத்தில் அவ்வன்பர்களுக்கு மாகறல் என்னும் தலத்தில் விரும்பி எழுந்தருள்புரிபவர் சிவபெருமான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. மோசூர்முனிசாமி முதலியார் - இயற்றிய தொண்டை நாட்டுத் திருப்பதித் தோத்திரக் கோவை திருமாகறல்

பிறந்த ஊர் : சென்னை பெரியமெட்டு, மோசூர் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு

முன்பதிப்பு

பதிப்பு : 1900 – வெளியீடு : புதுவை புதுப்பாக்கம் பெ.பொன்னுசாமி முதலியார்

உரை : காஞ்சிபுரம் முனைவர் சிவ.சண்முகசுந்தரம்

1. கவள யானை முகத்த னோடு(உ)யர்
காா்த்திகே யனைத்தந்த ஆதியே
பவமி குஞ்சிறு விதிசெய் வேள்வியைப்
பயன்இலாத தாய்ச்செய் தவா, புரி
பவள வார்சடைப் பரமனே எனைப்பரி
பவந்துடைத்(து) ஆளு வாய், திரு
உவண கேதனன் நாடி யேநிதம்
உன்னுமா கறல்உற் றசோதியே.

தெளிவுரை

கருடக்கொடி உடையோனாகிய திருமால் நாளும் விரும்பித் தொழுமாறு மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே! யானை முகம் உடைய விநாயகப் பெருமானையும் சிறப்புடைய முருகப்பெருமானையும் அருளிய முதல்வரே, தக்கன் (ஆணவத்தால்), பிறப்பினை மேலும் உண்டாக்கும் வேள்வியைச் செய்ய, அதனைப் பயனற்றதாய்ச் செய்தவரே, செந்நிறமுடைய சுருண்ட நீண்ட சடைமுடியை உடையவரே, என் பிறவிச்சுமையைக் களைந்து என்னை ஆட்கொள்வீராக.

அருஞ் சொற்பொருள்

யானைமுகத்தன் –விநாயகர் ; கார்த்திகேயன்–முருகர் ; பவம் –பிறப்பு; சிறுவிதி–தக்கன்; புரி–சுருண்ட ; பவளவார்சடை– செந்நிறமுடைய நீண்ட சடை ; பரிபவம் – பிறவிச்சுமை ; உவணகேதனன்– கருடக் கொடி உடையோனாகிய திருமால் ; உவணம்– கருடன் ; கேதனம்–கொடி ; நாடி–விரும்பி ; நிதம்– நாள்தோறும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. முதல்வ னேமறை மோலி மேவிய
மூன்றுகண் ணுடைமோ னஞானமே
முதலை வாயினின் மதலை யைத்தரு
மூர்த்திபோற் றிடும்இறை வனே! பகர்
குதலை மென்மொழி மாது பங்கனே
கோதிலா தஆனந்த வாரியே
இதய(ம்) மேவி என்இருள் அகற்றுவாய்
இணைஇல் மாகறல்உற் றசோதியே,

தெளிவுரை

இணையற்ற மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே, முதற்பொருளே, வேதங்களின் முடியாக விளங்குபவரே, முக்கண்ணுடைய தட்சணாமூர்த்தியே! முதலை உண்ட பாலகனை அதன் வாயினின்றும் மீண்டும் உயிருடன் எழுந்தருளுமாறு தேவாரப் பாக்கள் பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்படுபவரே, குழந்தை போன்று இனிய மென்மையான மொழிபேசுகின்ற உமையம்மையாரை இடப்பக்கத்தில் கொண்டவரே, குற்றமற்ற ஆனந்தக் கடலே, என்னுள்ளத்துள் எழுந்தருளி என் அறியாமையாகிய இருளை அகற்றுவீராக.

அருஞ் சொற்பொருள்

மோலி—முடி ; மதலை—குழந்தை ; குதலை—இனிய மொழி ; கோது—குற்றம் ; வாரி— கடல் ; இருள் — அறியாமை ; மாதுபங்கன் — உமையம்மையாரை இடப்பாகம் கொண்ட சிவபெருமான்.

3. சமர மாபுரி சண்மு கத்தனைத்
தந்துசூர் அறவாட் டுநாதனே
அமரர் மாதவர் முனிவர் போற்றிடும்
அன்பில் நன்னிலையிற்(று) எனச்சொலித்
தமர நூபுர மோலி டுந்திருத்
தாளைஎன் தலைச்சூட் டியே இடர்
குமைய இங்கு(உ) மை யோடு வந்தருள்
குலவுமா கறல்உற் றசோதியே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

மாகறல் என்னும் தலத்தில் உமையம்மையாருடன் எழுந்தருள் புரிகின்ற ஒளிவடிவமான சிவபெருமானே, ஆறுமுகக் கடவுளைத் தோற்றுவித்து அவரைத் திருச்செந்தூர் என்னும் தலத்தில் அசுரர்களுடன் போரிடச் செய்து அவர்களை வதைத்து அழித்தவரே, தேவர்களும் மிக்க தவம் செய்கின்ற முனிவர்களும் அன்புடன் போற்றித் துதிக்கும் நன்னிலைமை இத்தன்மையது எனச் சொல்ல ஒலிக்கும் உயர்ந்த சிலம் பணிந்த திருவடியினை என்தலைமீது என்னிடர் நீங்கச் சூட்டிடுவீராக.

அருஞ் சொற்பொருள்

சமரமாபுரி–திருச்செந்தூர் ; சண்முகம் – ஆறுமுகக் கடவுள் ; சூர்–அசுரர் ; அமரர் –தேவர் ; மாதவர் – மிக்க தவம் செய்கின்றவர்கள் ; இற்று – இத்தன்மையது ; தமரம் – ஒலி; நூபுரம்–சிலம்பு ; மோலி – உயர்ந்த ; குமைய–நீங்க.

4. இமைப்பு (இ) லாவிழி கொண்டதே வர்கள்
  ஏத்தியே சிரம்ஏற்றுந் தாளனே
உமைக்(கு) ஓர் பாகமற்(று) அரிக்(கு) ஓர் பாகமும்
  உவந்தளித் திடும்உர கமார்பனே
அமைத்த நன்னெறிப் பத்தி செய்திடும்
  அன்பனைத் தினம்ஆ ளுவாய், கவின்
சமைத்து (உ)யர்ந்திடு சிகரி சூழ்தரு
  தக்கமா கறல்உற் றசோதியே

தெளிவுரை

அழகுடன் அமைந்த உயர்ந்த மலைகள் சூழ்ந்த சிறப்புடைய மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவான சிவபெருமானே, கண்ணிமைக்கும் இயல்பிலாத் தேவர்கள் தம்தலைமேல் வைத்துப் போற்றித் துதிக்கும்படியான ஒப்பற்ற திருவடி கொண்டவரே, உமையம்மையாருக்கு ஒரு பாகமும் திருமாலுக்கு ஒரு பாகமும் மகிழ்ச்சியுடன் அளிக்கும் பாம்பணிந்த மார்பினை உடையவரே, ஆன்றோர் மொழிந்த நல்லொழுக்க நெறி நின்று நாள்தோறும் பத்தியுடன் வழிபட்டுவரும் அன்பனாகிய என்னை ஆட்கொள்வீராக.

அருஞ் சொற்பொருள்

விழி–கண் ; அரி–திருமால் ; உரகம் –பாம்பு ; கவின்–அழகு; சிகரி–மலை ;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. வந்தி பிட்டினை உண்டு கொட்டினை
வளர்நெடுங் கரம்வைத்த வேதிய,
கொந்து சேர்வன மாலி போற்றிடுங்
கொற்றவா குரைகழ லிலேதினம்
புந்தி நைந்துநைந்(து) உருகு மா(று) அருள்
புவனம்யா வையுந்தந் தஆதியே
ஐந்(து)அ டக்கிய சிந்தை மாதவர்
அமரு(ம்)மா கறல்உற் றசோதியே

தெளிவுரை

உலகம் யாவற்றையும் படைத்த முதற்பொருளே, ஐம்புலன்களையும் அடக்கிய தவச்சீலர்களின் சிந்தையில் குடிகொள்ளும் பொருட்டு மாகறல் என்னும் தலத்தில் ஒளிவடிவமாக எழுந்தருளியுள்ள சிவபெருமானே, வந்தி என்னும் மூதாட்டி பேரன்புடன் அளித்த பிட்டினை உண்டு அவள் பொருட்டு மண்ணைத் தம்நீண்ட கரங்களால் வையையாற்றில் கொட்டிய கடவுளே, தேவர்கள் சூழத் திருமால் போற்றிடும் தலைவரே, உம்முடைய ஒலிக்கும் கழலணிந்த திருவடிகளில் நாளும் என்மனம் நெகிழ்ந்து உருகுமாறு அருள்புரிவீராக.

அருஞ் சொற்பொருள்

வேதிய(ன்) – கடவுள் ; வனமாலி–திருமால்; புந்தி–மனம் ; புவனம்–உலகம் ; ஐந்தடக்கிய– ஐம்புலன்களையும் வென்ற ;

6. விமல நாரணன் விரிஞ்சன் ஆதியர்
மிளிருநின் பதங்கா ணவல்லரோ?
இமய மால்வரைக் குமரி காதல !
என்னைஆ ளுடைப்பர மனே! உயர்
சமயமென் னும்ஓர் சைவம் வாழ்வுறத்
தக்கமே லவர்தாள் மகிழ்வுற
இமயர் ஏத்திடுங் காழி வேந்தரால்
ஏத்துமா கறல்உற் றசோதியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

உலகிலேயே மிக உயர்வுடையதாய் விளங்கும் ஒப்பற்ற சைவம் என்னும் சமயம் என்றென்றும் மேலோங்கித் திகழவும் இறையடியார்களின் உள்ளம் மகிழ்ச்சியடையவும் தேவர்கள் போற்றும்படியான திருஞானசம்பந்தர் துதித்துப் பாடிய மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே, குற்றமற்ற திருமால், பிரமன் முதலானவர்கள் ஒளிரும் உம் திருவடிகளைக் காண வல்லமை உடையரோ? இமயமலை அரசன் மகளாகிய உமையம்மையாரின் கணவரே, பரம்பொருளே! என்னை ஆட்கொள்வீராக.

அருஞ் சொற்பொருள்

விமலன்–குற்றமற்றவன் ; நாரணன்–திருமால் ; விரிஞ்சன்–பிரமன் ; மிளிரும் – ஒளிரும் ; வரை–மலை ; குமரி–உமையம்மை ; காதல–கணவர் ; இமயர் –தேவர் ; காழிவேந்தர்– திருஞானசம்பந்தர்.

7. ஆதி மூர்த்தி என்(று) ஏத் துமாலினுக்(கு)
ஆழிவா ரணம்ஈந் தவள்ளலே !
நீதிசேர் முனிமார்க் கண்டற்(கு) அருள்நித்த!
நின்அடி நேயம் ஈந்து, எனை
வாதியா வகைவஞ் சவல்வினை வாட்டங்
கொண்(டு) உடன் ஓடச் செய்குவாய்
ஓதும் வேதியர் வேள்வி ஆற்றிடும்
ஒப்(பு)இல் மாகறல்உற் றசோதியே

தெளிவுரை

அந்தணர்கள் வேதங்களை முறைப்படி ஓதி வேள்வியினைச் செய்கின்ற மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே, முதன்மைப் பொருளாக விளங்குபவரே! எனப்போற்றிப் பணிந்த திருமாலுக்குச் சக்கராயுதம் தந்தருளிய வள்ளலே, நீதிநூல்களில் கூறியவாறு நல்லொழுக்க நெறிநின்று வழிபட்ட மார்க்கண்டேயரின் உயிரைக் காத்தருளிய கடவுளே, உம்முடைய திருவடியின்பால் அன்புகொள்ளச் செய்து கொடிய வினைகள் என்னைத் துன்புறுத்தாதவாறும் அவை நலிந்து ஓடவும் செய்வீராக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருஞ் சொற்பொருள்

மால்—திருமால் ; ஆழிவாரணம் —சக்கராயுதம் ; நித்தன்—கடவுள் ; நேயம்—அன்பு ; வாதியா —துன்புறுத்தாமல்; முனிமார்க்கண்டர்—மார்க்கண்டேய முனிவர்

8. ஓகை யோ(டு)உப மனியன் இன்புற
ஒழுகுபாற் கடல்ஈந் தநாயகா!
வாகை மாலிகை வனையு மன்மதன்
வன்புரத் தினில்வன் னிவைத்தவா!
ஏக நாதனே! எல்லை யில்லதோர்
இன்பமென் தனக்(கு)ஒல் லையே அருள்
ஈகை நற்குணம் எய்துவோர் உறைந்து
இலகுமா கறல்உற் றசோதியே.

தெளிவுரை

ஈகைப் பண்பும் நற்குணமும் உடையோர் வாழ்விடமாகக் கொண்டுள்ள மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே! உபமன்யு முனிவர் மிக்க மகிழ்ச்சியுடன் இன்புறுமாறு பெருகிய பாற்கடலையே அளித்த தலைவரே, வெற்றிமாலை சூடிய மன்மதனை நெற்றிக் கண்ணிலிருந்து வந்த தீயினாலேயே அழித்தவரே, ஒப்பற்ற ஒரே பரம்பொருளே, எல்லையற்ற இன்பத்தை எனக்கு விரைவில் அளித்தருள்வீராக.

அருஞ் சொற்பொருள்

ஓகை—மகிழ்ச்சி ; உபமனியன் —உபமன்யுமுனிவர் ; வாகை—வெற்றி; மாலிகை—மாலை ; வன்னி—நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய தீ ; ஏகன்—ஒருவன் ; ஒல்லை—விரைவு; உறை—வாழ்விடம்.

9. கருவை அம்பதிக் களவின் நீழலிற்
கருதியே உறைகண் ணுதா(ன்)நறை
குரவு செஞ்சடை மீதில் வைத்திடுங்
குழக உழு வையி(ன்) உரியைப் போர்வைகொண்(டு)
அரவு சூடிய அத்த னே! எனை
ஆளுவாய் வினைமா யவே ; குரை
பரவை சூழ்நில மன்ப தைபுகழ்
பழுதுஇல்மா கறல்உற் றசோதியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

ஒலிக்கும் கடல் சூழ்ந்த நிலவுலகமே புகழ்ந்து போற்றும் குற்றமற்ற மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே, கரிவலம்வந்த நல்லூர்என்னும் தலத்தின்கண் எப்பொழுதும் உறைகின்ற முக்கண்ணுடைய பெருமானே, சிவந்த சடைமுடியில் தேன்மணத்தை உடையவரே, புலியின் தோலை ஆடையாகவும் பாம்பை அணிகலனாகவும் கொண்டவரே, என்வினைகள் யாவும் அழிய என்னை ஆட்கொண்டருள்வீராக.

அருஞ் சொற்பொருள்

கருவையம்பதி–கரிவலம்வந்த நல்லூர் (குலசேகர பாண்டியன் வேட்டையாடிய பொழுது எதிரில் வந்தது ஒரு யானை. அதனைத் துரத்த அஃது ஓடிப்போய் சிவலிங்கம் இருந்த புதரை வலம் வந்து சிவகணமானது. அதனால் அத்தலம் இப்பெயர் பெற்றது.) நறை–தேன்; குரவு–நறுமணம் ; உழுவை–புலி ; உரிவை–தோல்; அரவு–பாம்பு ; பரவை–கடல் ; மன்பதை–உலகத்திலுள்ள மக்கள்.

10. அண்ட கோளமும் அகில லோகமும்
    மண்டுசெந் தழல்வடி வனே ! எனை
நண்பு கொண்டிட மோன ஞானமே
    நவிலுவாய், நகைகொண்டு முப்புரம்
பண்டு எரித்திடும் பணிநி லாமுடிப்
    பண்ணவா பரமேட்டி வம்(பு)அலர்
செண்பகம் வளர்வா விசூழ்ந் திடுஞ்சீர்
    கொள்மா கறல்உற் றசோதியே.

தெளிவுரை

பண்டைக் காலத்தில் முப்புரங்களையும் புன்முறுவல் செய்தே எரித்தவரே, குளிர்ந்த பிறைநிலவினைத் தம்முடியில் சூடியவரே, உமையம்மையாருடன் நறுமணம் வீசுகின்ற சண்பக மலர்கள் நிறைந்த குளங்கள் சூழ்ந்த சிறப்புமிக்க மாகறல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஒளிவடிவமான சிவபெருமானே, ஆகாயம் உள்ளிட்ட அனைத்திலும் எல்லா உலகங்களிலும் மிக்க செம்மேனியம்மானாகத் திகழ்பவரே, அறிவே வடிவமாகக் கொண்டவரே, என்னிடம் அன்புகொள்ளும் மொழியினை மொழிவாயாக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருஞ் சொற்பொருள்

செந்தழல்–செம்னேி ; நண்பு–அன்பு ; நகை–புன்முறுவல் ; முப்புரம்–மூன்றுகோட்டைகள் (சூரபதுமனின் தம்பியாகிய தாரகாசுரன் புதல்வர்கள் தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி ஆகிய மூவரின் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆன மூன்று கோட்டைகள்) ; பனி–குளிர்ந்த ; பண்டு–பண்டைக்காலம் ; பரமேட்டி–உமையம்மையார் ; வம்பு–நறுமணம் ; வாவி–குளம்.

மேசூர் முனிசாமி முதலியார்
இயற்றிய
தொண்டைநாட்டுத் திருப்பதித் தோத்திரக் கோவை, திருமாகறல் நிறைவு

பயன்பட்ட நூலகம்:

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் நூல் நிலையம்,
நெ.2, அருண்டேல் கடற்கரைச் சாலை,
கலாசேத்திர காலனி பள்ளி வளாகம்,
பெசண்ட் நகர், சென்னை – 90.

தலமரம் எலுமிச்சை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. பன்னிரு திருநாமங்கள் பெயர்க்காரண விளக்கப் பாடல்கள் பாடியவர் ....

பயன்பட்ட நூல் : திருமாகறலீஸ்வரர் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பொய்யா விநாயகர், முருகர், நவக்கிரக ஆலய திருப்பணி–இராயவேலூர் வி.கே.கந்தசாமி முதலியார், அவர்களின் அச்சுப்பதிப்பு ....

வெளியீடு : மாகறல் எம்.வி.குப்புசாமி முதலியார் (பதிப்பு 1960) (பக்கம் 14 – 16)

உரை : காஞ்சிபுரம் முனைவர் சிவ.சண்முகசுந்தரம்

1. நிலையிட்ட நாதர்

முத்திமா நகராம் இத்தலத் தின்கண்
முத்தாரம் மூவரும் அறியா
அத்தனே உகந்து சுயம்புலிங் கமதாய்
ஆரணன் அகந்தையாய் அகத்துப்
பித்தனாய்த் தினமாம் பிரளய நீங்கிப்
பிறங்குநாள் பூசனை செய்ய
நித்தனே வெளியாய் நல்லுரை யருளி
உலகெலாம் நிலையிட்ட நிமலா!

தெளிவுரை

முத்திப்பேற்றை அளிக்கும் சிறந்த தலமாக விளங்குவது மாகறல். இத்தலத்தில் பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவராலும் அறிய இயலாத இறைவனாகிய சிவபெருமான், சுயம்பு இலிங்கமாய் எழுந்தருளினார். பிரமன் மனதில் செருக்குற்று சிவனாரை வழிபடாமையால் படைப்புத் தொழிலை மறந்தார். உலகம் அழிந்து மீண்டும் விளங்கிய நாள்முதல் பிரமன் மிக்க ஈடுபாட்டுடன் நாள்தோறும் வழிபாடு செய்துவர மீண்டும் படைப்புத் தொழிலை அருள சிவபெருமான் வெளிப்பட்டு நல்லுரைகளை நவின்றருளினார். இதனால் உலகம் எல்லாவற்றையும் நிலைநிறுத்திக் குற்றமற்றவராய்ச் சிவபெருமான் விளங்குகிறார்.

அருஞ் சொற்பொருள்

முத்திமாநகர் – திருமாகறல் என்னும் தலம்; முத்தாராம் மூவர்– முத்திக்குரிய மூவர் (பிரமன், திருமால், உருத்திரன்); அத்தன்–சிவன்; ஆரணன்–பிரமன்; பித்தன் – மிக்க ஈடுபாடுடையவன்; பிரளயம் –உலகம் அழிதல்; பிறங்கு – விளங்கு; நித்தன் – சிவன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. அடைக்கலங் காத்த நாதர்

விண்ணவர் முனிவர் இந்திரர் அயன்மால்
விபுதர் வித்தியாதரர் சித்தர்
பண்ணு நல்லுரக் குடுபதி அருக்கன்
பகர்வ(து)அக் கோள்கள் ஒன்பானும்
எண்ணிய விஞ்சை யர்கள் வயிரவர்
திக்கோர்இவ் வுலகத்த வர்எவரும்
அண்ணல் முப்புரத் தோர்தீமை யி(ன்)அடைய
அடைக்கலம் காத்தருள் பரனே.

தெளிவுரை

தேவர்கள், முனிவர்கள், இந்திரன், பிரமன், திருமால், அறிஞர்கள் மற்றுமுள்ள தேவரினத்தினர், சித்தர்கள், சந்திரன்,சூரியன் உள்ளிட்ட ஒன்பது கிரகத்தினர், ஞானிகள், வயிரவர், எண்டிசை உள்ளோர் மற்றும் இவ்வுலகத்திலுள்ள அனைவரும் முப்புரத்தினரால் மிகுதியான துன்பம் அடைய, அவர்களுக்கெல்லாம் அடைக்கலம் அருளிக்காத்த பரம்பொருளாக விளங்குகிறார்.

அருஞ் சொற்பொருள்

விண்ணவர்–தேவர்; அயன்–பிரமன்; மால் –திருமால்; விபுதர்–அறிஞர்; வித்தியாதரர்–தேவரினத்தினர்; உடுபதி–சந்திரன்; அருக்கன் –சூரியன்; விஞ்சையர்–ஞானியர்கள்; முப்புரத்தோர்–மூன்று கோட்டைகளை அமைத்துக் கொண்டு எங்கும் திரிந்து வந்த தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்னும் முன்று அசுரர்கள்.

3. ஆபத்தில் காத்தவர்

பூமிஓர் தேராய் மாமறை பரியாய்
மணிவரைப் பொருப்புவில் நாணாய்
நாம வாசுகியும் விண்(டு)ஒ ருசரமாய்
நாகரும் தேவரும் படையாய்ப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பூமி முப்புரத் தார்போ கவேகணத்
துப்புரத் தொடுபொறி பொறியாய்த்
தாஎன நகைத்தே அமரர் யாவரையும்
ஆபத்திற் காத்தருள் பரனே.

தெளிவுரை

தேவர்களுக்கு முப்புரத்தினரால் தீங்குண்டாயிற்று. அப்பொழுது சிவபெருமான் உலகம் ஒரு தேராகவும் வேதங்கள் குதிரைகளாகவும் அழகிய மேருமலையே வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பு நாணாகவும் திருமாலே அம்பாகவும் நாக நாட்டவர்களும் தேவர்களும் படைவீரர்களாகவும் முப்புரத்தார்களின் நாடு நோக்கிச் சென்று புன்சிரிப்பினாலேயே ஒரு நொடியில் முப்புரத்தவரின் கோட்டைகளைப் பொடிப்பொடியாக்கித் தேவர்கள் யாவரையும் ஆபத்தினின்றும் காத்த பரம்பொருளாகத் திகழ்கிறார்.

அருஞ் சொற்பொருள்

மறை – வேதம்; பரி–குதிரை; வரைபொருப்பு – மலை, ஒருபொருட் பன்மொழி; விண்டு–திருமால்; சரம்–அம்பு; கணம்–நொடி; நகை–புன்சிரிப்பு; அமரர் – தேவர்.

4. மங்கலங்காத்தவர்

உன்னி ஆநந்த யோகநீ செய்ய
உபத்திரம் சூரரால் தோன்றப்
பின்னமாய்த் தவந்தான் போகவே மதனன்
பிறங்கும் ஐங் கணையினைத் தொடுக்க
பின்னிய நெற்றி விழியினை மலர்ந்து
வேவ (எ)ரித்திடச் செயஇரதி
மன்னிய பூசை செய்திட அவள்தன்
மங்கலங் காத்த பரனே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

சிவபெருமான் தியானத்திற்குரிய நிலையில் மகிழ்ச்சியுடன் தியானம் செய்து கொண்டிருக்கையில் தேவர்கள், அவருடைய தியானத்திற்கு இடையூறு விளைவிக்க எண்ணினர்; அதனால் அவர்பால் மன்மதனைக் கொண்டு அவனுடைய ஐந்து மலர்க்கணைகளைத் தொடுக்கச் செய்தனர். அதனை உணர்ந்த சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணைத்திறக்க வெளிப்பட்ட தீப்பொறியினை மன்மதன்பால் ஏவினார். மன்மதன் அந்நெருப்பில் வெந்துபோனான். அப்பொழுது அவனுடைய மனைவி இரதி மிக்க பூசை செய்து தன்கணவன் பிழைக்க வேண்டியதால் அவளுடைய மங்கலத்தைக் காத்தருளிய பரம்பொருளாக விளங்குகிறார்.

அருஞ் சொற்பொருள்

உன்னி – தியானத்திற்குரிய நிலைமை; உபத்திரவம்–இடையூறு; சூரர்–தேவர்; மதனன் – மன்மதன்; பிறங்கும் – விளங்கும்; ஐங்கணை–ஐந்து மலரம்புகள் (தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம்); வேவ – வெந்து; இரதி– மன்மதனின் மனைவியின் பெயர்.

5. திருமாகறலான்

அண்ணு(இ)ரண் டசுரர் சூரபன் மன்போர்
அஞ்சியே அடைந்துநின் திருத்தாள்
பண்ணிய பூசைக்கு (உ)கந்துமுன் வெளியாய்ப்
பாசங்கள் அறுத்திட்ட அதனா(ல்)
விண்ணவர் மலர்கள் விழைவுடன் பெய்ய
வீறியே அத்தொழில் விளங்க
மண்ணில்இந் நகர்க்கு விளங்குமே அருளு(ம்)
மன்னுமா கறலெனும் பரனே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவுரை

சூரபன்பன் தொடுத்த போருக்கு அஞ்சிச் சிதறுண்ட தேவர்கள் சிவபெருமானை அணுகி, அவருடைய திருவடியினை அடைக்கலம் அடைந்து செய்த வழிபாட்டினை விரும்பி வெளிப்பட்டார் சிவபெருமான். அவர் தேவர்கள்தம் துயரத்தை அகற்றினார். தேவர்கள் மலர்களை மழைபோல் பொழிந்தனர். இந்நிலவுலகில் இறைவனை வழிபடும் தொழில் மேம்பட்டு விளங்க அருளிய திறத்தால் பரம்பொருள் மாகறலான் (மாகு + அறலான் – பாசப்பிணிப்பினின்றும் விடுபடும் வழி அருளியவன்) என அழைக்கப்படுகின்றார்.

அருஞ் சொற்பொருள்

அண்ணு – அணுகி; இரண்ட – சிதறுண்ட; சுரர் – தேவர்; பாசம்–துயரம்; விண்ணவர் – தேவர்; வீறியே – மேம்படவே. மாகு – பாசப் பிணிப்பு.

6. மகம் வாழ்வித்த நாதர்

உன்னிஓர் யாகம் காசிபன் செய்ய
உற்றழித்(து) அருளவே அசுரன்
சென்னியால் வணங்கி உறைக்கவே முறையாய்ச்
செய்வினை செலச்சொலி யாவரைப்
பின்னமே செய்து அமரர்க்குப் பிரமல்
லால் யாவரும் வணங்க
மன்னிய முனிவன் மனமகிழ்ந்(து)
அருளே வாழ்விக்கும் பரனே

தெளிவுரை

காசிபன் என்னும் முனிவர் ஒரு யாகம் செய்து தியானித் திருக்கையில் அதனை அழித்தருள அசுரர்களின் தலைவன் இறைவனை வணங்கி முறையிட்டான். முறையாக யாவரும் தத்தம் செயல்களைச் செய்யச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொல்லியும் அவ்வாறு செய்யாதவர்க்குத் துன்பம் உண்டாகவும் தேவர்கட்கு மட்டும் உரியதாகச் செய்யாமல் யாவரும் வணங்கிப் போற்றுமாறு யாகம் செய்தவர். அம்முனிவர் அவர் மனம் மகிழ்ந்து யாகம் செய்ய அருளிய பரம்பொருளாக விளங்குபவர்.

குறிப்பு

காசிபன் – ஒருமுனிவர்; மரீசி மகரிஷியின் புதல்வர். இவர், அதிதி என்பவளால் தேவர்களுக்குத் தந்தையாவர்; திதி என்பவளால் அசுரர்களுக்குத் தந்தையாவர்.

அருஞ் சொற்பொருள்

உன்னி – தியானித்திருக்கையில்; மகம் – யாகம் (வேள்வி). உறைக்க – முறையிட; யாவரை – சொல்லியவாறு செய்யாதவரை; பின்னம் – துன்பம்; அமரர் – தேவர்; பிரமம் – முனிவர்; பரன் – பரம்பொருள்.

7. அகத்தீசர்

சந்தனப் பொதியச் செந்தமி ழதனால்
தண்மைகொள் தமிழ்முனி உகந்து
வந்துநற் பூசை பரிவுடன் செய்ய
மன்னிய முத்தமிழ் அருளிச்
சுந்தரக் குருவாய் நல்லுரை செய்து
சுந்தர மாகவே புகல
அந்த நன்முனிப் பேர்(உ)னக் கருளத்தான்
அருளிய அகத்தீ சுரனே.

தெளிவுரை

தமிழ் முனிவராகிய அகத்தியர், குளிர்ச்சி பொருந்திய சந்தன மணம் வீசும் பொதியமலையினின்று வந்து, செந்தமிழ் மொழியில் மிக்க அன்புடன் சிறப்பாக வழிபாடு செய்ய அவருக்கு முத்தமிழிலும் வல்லமை அருளினார் சிவபெருமான்; மேலும், மேன்மை மிக்க குருவாய் விளங்கிச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சீரிய முறையில் நன்மை தரும் மொழிகளை நவின்றருளினார். அதனால் அம்முனிவர் உவப்படைந்து தம்பெயரையே சிவபெருமானுக்கு இட்டு வழங்க, யாவரும் அகத்தீசுரர் என்னும் பெயரால் தம்மை அழைக்க அருள்புரிந்தவர் சிவபெருமான்.

அருஞ் சொற்பொருள்

தமிழ்முனி – அகத்தியர்; தண்மை – குளிர்ச்சி; சந்தனப் பொதியம்–சந்தன மணம் வீசும் பொதியமலை; முத்தமிழ் – தமிழின் மூன்று கூறுகள் (இயல், இசை, நாடகம்); சுந்தரம் – மேன்மை; சிறப்பு.

8. பரிந்துகாத்த நாதர்

சுரர்குரு மனையை சோமனுங் கலந்து
துணைமுலைத் தோய்ந்(து) இடைத் தோள்கள்
சரசமே செய்யக் கண்டுபொற் குருவும்
சபித்திடப் பதிதமாம் தொழிலாய்
வரத நின் பூசை செய்திட மகிழ்ந்து
மான்மழு சிறக்கவே நின்று
பரமநீ அஞ்சல் அஞ்சலென்று அவனைப்
பரிந்துகாத் தருளிய பரனே

தெளிவுரை

தேவர்கள்களின் குருவாகிய பிருகஸ்பதியின் இல்லாளுடன் சோமன் உறவு கொண்டு மார்பகத்தையும் தோள்களையும் தழுவி பரிகாசம் செய்தலைக் கண்ணுற்ற பிருகஸ்பதி, அவனை ஒழுக்கத் தவறுடையோனாகவே சபித்தார். அவனோ பின்னர் வரம் அருள்பவராகிய இறைவனைப் பணிந்து வழிபாடு புரிந்திட சிவபெருமான் மகிழ்ச்சியுற்றார். எவ்வுயிர்க்கும் அறக்கருணையும் மறக்கருணையும் புரியவே மானினையும் மழுவையும் ஏந்திய அவர், அவற்றின் சிறப்பு ஓங்க அஞ்சற்க அஞ்சற்க! என்று கூறி அச்சோமனைப் பரிந்து காத்தருளிய பரம்பொருளாக விளங்குகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருஞ் சொற்பொருள்

சுரர்குரு – பிருகஸ்பதி; சோமன் – அத்திரி புத்திரன் ஆகிய சந்திரன்; சரசம் – பரிகாசம்; பொற்குரு – பிருகஸ்பதி; பதிதம் – ஒழுக்கத்தவறு;

9. ஆபத்சகாயர்

முக்கணா மூர்த்தி என்றுதா ரகையு(ம்)
மொழிந்(து) இனி(து) ஏத்திட முனிவன்
தக்கணன் சாப நிவாரண மாகத்
தந்தருள் என்னவே குருவை
இக்கணம் வரச்செய் என்(று)அழைத் தருளி
ஈடற்ற இறையே நீ உகந்த
அக்கணம் அருளி அபயம்என் றவர்க்கே
ஆபத் சகாயஞ்செய் பரனே.

தெளிவுரை

முன்று கண்களுடைய சிவபெருமானே என்று இனிதே மொழிந்த பிருகஸ்பதியின் மனைவியான தாரை தன் தவறுணர்ந்து போற்றிப் புகழ்ந்தாள். பிருகஸ்பதி, தட்சிணாமூர்த்தியாகிய நம்பிரானிடம் சாபநிவாரணம் தந்தருள வேண்டினார். ஒப்பற்ற பரம்பொருளானவர், முனிவரிடம் 'இப்பொழுதே உம் மனைவியை இங்கு வரச் செய்க' என்று கூறி அழைத்து அருள்புரிந்தார். தாரையின் பத்திக்கு உகந்த சிவபெருமான் தாரை கருணை காட்ட வேண்டிய அத்தருணத்திலேயே அவளுக்குரிய ஆபத்தினின்றும் காத்தருளியமையால் ஆபத்சகாயராக அப்பரம்பொருள் விளங்குகிறார்.

அருஞ் சொற்பொருள்

தாரகை–தாரை, பிருகஸ்பதியின் மனைவி; முனிவன் – பிருகஸ்பதி; தக்கணம் – தட்சணாமூர்த்தி; குரு – பிருகஸ்பதி; அபயம் – கருணை காட்ட வேண்டல்; முக்கண்ணா – மூன்று கண்களுடைய சிவபெருமான் (சூரியன், சந்திரன், அக்கினி).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. தடுத்தாட்கொண்டார்

சிற்பரா கிருமி எத்தவஞ் செய்தேன்
செலச்செய்து திருநகர்க்(கு) எனைமுன்
பொற்புறும் உடும்பாய் புரையுள் முன்னூர்ந்து
புற்றுநம் புலையன் யானோக்கு
அற்பன் (ஆ)தலினால் படச்செய அடியேன்
அகந்தை யும்பொறுத் தருளித்தான்
தற்பரா பிறவி இத்தொழும் பனையே
தடுத்திட்(டு) ஆட்கொண்டருள் பரனே.

தெளிவுரை

மாகறல் என்னும் தலம் நோக்கி என்னை முன்னே செல்லச் செய்து என்முன்னால் பொன்னிறமான உடும்பு வடிவம் கொண்டு புற்றிலிருந்து வெளிப்பட்டு ஊர்ந்து சென்றீர்; இழிவு கொண்டவனாகிய யான், புற்றினைக் காணா சிறுமையுள்ளம் கொண்டவனாகிய யான் காண வேண்டுதல் பொருட்டு வெளிப்பட்டீர். இவ்வடியவனின் செருக்கைப் பொறுத்தருளி இப்பிறவியிலேயே என்னை தடுத்தாட் கொண்டருளிய பரம்பொருளாக விளங்குபவரே, இறைவனே! என்றும் புழுபோன்ற சோழனாகிய யான் இப்பேற்றுக்கு என்ன தவம் செய்தேன் என்றும் வியந்து இயம்பினான்.

குறிப்பு

'வளவன்முன் அம்பொன் உடும்பின் வாலென வீற்றிருந்தானே'

திருமாகறல் பதிற்றுப் பத்தந்தாதி–12

அருஞ் சொற்பொருள்

சிற்பரம் – இறைவன், சிற்பரா – விளிச்சொல், கிருமி–புழு; திருநகர் – திருமாகறல் என்னும் தலம்; புலையன் –இழிவுடையவன்; அற்பன் – சிறுமையுள்ளம் கொண்டவன்; அகந்தை – செருக்கு; தொழும்பன் – அடியவன் ; உடும்பு–இரண்டு நாக்குள்ள ஊர்ந்து செல்லும் ஒரு பிராணி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11. புற்றிடங் கொண்டார்

நிலைமையே இல்லா நிரப்புடைப் பேதை
மூடனாய் புலைகொலை களவு
இலகவே செய்யும் எனைஒரு பொருட்டாய்
எம்பிரான் கருணைகூர்ந்(து) இனிதா
அலகிலாக் குற்றம் யாவையும் பொறுத்தே
அயன்அரி காணொணா அரனே
புலமையாம் உடும்பாய்த் தரிசனம் செய்யப்
புற்றிடங் கொண்ட நாயகனே.

தெளிவுரை

நல்லகுணம் இல்லாதவனும் அறிவில் குறைபாடும் புலை, கொலை, களவு ஆகிய செயல்களை எளிதாகச் செய்யும் கீழ்மகனாயும் உள்ள என்னை ஒரு பொருளாகக் கருதிச் சிவபெருமான் கருணை மிக்குடையவராய் என்னுடைய அளவில்லாத குற்றங்கள் யாவற்றையும் இனிதே பொறுத்தருளினார். அவர் திருமால், பிரமன் ஆகிய இருவரும் காணஇயலா பேரொளி வடிவமாயிருப்பவர். எனக்கு மெய்ஞ்ஞானம் ஊட்டுபவராய்ப் புற்றை இடமாகக் கொண்ட சிவபெருமான் உடும்பாய்க் காட்சி அருளினார்.

அருஞ் சொற்பொருள்

நிலைமை – குணம்; நிரப்பு – குறைபாடு; பேதை – அறிவில்லாதவன்; மூடன்–கீழ்மகன்; புலை–இழிவு; இலகு–எளிது; புலமை–மெய்ஞ்ஞானம்; அயன்–பிரமன்; அரி–திருமால்.

12. பாரத்தழும்பர்

என்செய்தேன் பரம என்தவம் அன்றே
என்முன்னோர் செய்தமா தவமோ
முன்செய்த வினையால் முட்(டு)அற இந்த
முத்திமா நகர் அருளிச் செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வஞ்சகன் முன்னே உடும்பு உருவாகி
வன்மிகம் அதனில் உற்றுப்
பஞ்சபா தகன்யான் நெறிப்படப் பாரத்
தழும்பனா கியகுரு பரனே

தெளிவுரை

பரம்பொருளே, யான் தவம் எதுவும் செய்யவில்லை. என்னுடைய மூதாதையர்கள் செய்த பெருந்தவத்தின் பயனாலோ முற்பிறவியில் யான் செய்த நற்செயலாலோ என்னுடைய வருத்தங்கள் யாவும் நீங்க, முத்திப்பேறு அளிக்கும் இந்த மாகறல் என்னும் தலத்திற்கு என்னை வருமாறு செய்தீர். வஞ்சகனாகிய என்முன்னே உடும்பு வடிவத்தில் புற்றிலிருந்து எழுந்தருளிப் பஞ்சபாதகனாகிய யான் நன்னெறியில் ஒழுக என்னுடைய நிறைந்த குற்றத்தைப் பொறுத்தருளிய மேலான பரம்பொருளாகத் திகழ்கிறீர்.

குறப்பு

பாடல்கள் 10, 11, 12 ஆகிய மூன்றும் சோழ மன்னனது கூற்றாகக் கொண்டு பாடப்பட்டுள்ளமை காணலாம்.

அருஞ் சொற்பொருள்

முட்டு – வருத்தம்; முத்திமாநகர்–மாகறல் என்னும் தலம்; வன்மிகம்–புற்று; பஞ்சபாதகன் – பஞ்சபாதகன் செய்பவன், பஞ்சபாதகங்களாவன – கொலை, களவு, பொய், சூது, கள்ளுண்ணல்; பாரத்தழும்பர் – நிறைந்த குற்றத்தைப் பொறுத்தருளியவர்.

பன்னிரு திருநாமங்கள்
பெயர்க்காரண விளக்கப் பாடல்கள் நிறைவு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. அருள்மிகு பொய்யா விநாயகர் துதி

வெய்யாக் கதிரவன் முன்இருள்போல வினையகற்றும்
கையானே யான்தொழ முன்னின்று காத்தருள் கற்பகமே
செய்யாற்றின்வட பால்இருக் கின்றசெங்கண் மால்மருகா
பொய்யா விநாயகனேதிரு மாகறல் புண்ணியனே.

தெளிவுரை

செய்யாற்றின் வடகரையில் உள்ள திருமாகறல் என்னும் தலத்தில் எழுந்தருள்புரியும் புண்ணியமூர்த்தியே, பொய்யாத மொழியினை உடைய விநாயகப் பெருமானே, வெப்பத்தைத் தரும் சூரியன்முன் இருள் இல்லாது போதல்போல் எல்லா வினைகளையும் நீக்கிடும் தும்பிக்கையினை உடையோனே, கற்பகமரம் போன்றவனே, யான் உம்மைப் பணிந்து வணங்க முன்னின்று காத்தருள்புரிவீராக.

8. அருள் தரும் புவனநாயகி அம்மை துதி

உரை : செய்யாறு விநாயக வீரமணி

மத்த மலர்சடை யானை மாகறலுள்
தேவர்கோன் பணிந்து போற்ற
பத்தர் கள்புனல் மூழ்கி பவப்பிணிகள்
புறத்தே கப்பா டியாட
வித்தகனாம் அகத்தீசர் ஒரு பாகத்து (கு) அமர்ந்து
அருளும் நற்றா யவளாம்
சக்தி சிவகாமி மகிழ்திரு புவனநா
யகியை மறக்கொ ணாதே.

தெளிவுரை

ஊமத்தமலர் பொலியும் சடையையுடைய சிவபெருமான், இந்திரன்வழிபடவும், பத்தர்கள் சேயாற்றில் நீராடி நீறணிந்து வழிபட்டு இன்புறவும், பிறவிப்பிணி நீங்கிப் பேரின்பம் பெறவும் திருமாகறலில் எழுந்தருளியுள்ளார். அகத்தீசர் என்னும் திருப்பெயர் தரித்த பெருமானின் இடப்பாகத்தே விளங்கி அருள் பொழியும் தாயான திருபுவனநாயகியை நம்மால் மறக்க முடியுமா? மறவாது வழிபட வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. திருமாகறல் பதிற்றுப்பத்து அந்தாதி முன்பதிப்புகள்
பாடியவர்...................

பதிப்பு : 1906

வெளியீடு : காஞ்சிபுரம் சராப்பு வியாபாரம்
ஒலேட்டி குப்புசாமிசெட்டியார், காடி நஞ்சையசெட்டியார்

நூலகம் : மறைமலை அடிகள் நூலகம், கன்னிமாரா பொது நூலக வளாகம் (3வது தளம்) எழும்பூர் சென்னன.

நூல் எண் : அந்தாதி நூல் வரிசைஎண்–126

பதிப்பு : 1959

வெளியீடு : காஞ்சிபுரம் குலாலர் வீதி, ஸ்ரீ சரஸ்வதி ஜவுளிஸ்டோர்ஸ் உரிமையாளர் எம்.சண்முக உடையார்

தகவல் : சண்முக முதலியார் மாகறல் திருக்கோயில் பணியாளர்

இந்நூல் தனி நூலாக வெளியிடுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. காப்பு – 1 பாடல், நூல் – 100 பாடல்கள், நூல் பயன்–2 பாடல்கள், ஆக மொத்தம் 103 பாடல்கள் உள்ளன.

10. தலபுராணம் ஆய்வு

தமிழில் தலபுராணங்களை, (பதிப்பு–1995 பாவை வெளியீட்டகம் தஞ்சாவூர்) முனைவர் வேலூர். இரா.மாதவன் அவர்கள் மிகவும் விரிவாக ஆய்வு செய்துள்ளார். ஆய்வின் முலம் தொண்டை நாட்லுள்ள 32 பாடல்பெற்ற தலங்களுள் 21 தலங்களுக்கு மட்டுமே தலபுராணங்கள் உள்ளன என்றும், திருமாகறல் தலத்திற்குத் தலபுராணம் கிடைக்கவில்லை என்றும் அறிவித்துள்ளார். (முதல்பகுதி பக்கம் எண்.274)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. (1) நான்கு கால பூஜை விவரம்

காலை சந்தி	:	காலை	8.00	முதல்	9.00	வரை
உச்சிகாலம்	:	பகல்	11.30	முதல்	12.00	வரை
சாயங்காலம்	:	மாலை	6.00	முதல்	7.00	வரை
அர்த்தசாம பூசை	:	இரவு	8.00	முதல்	8.30	வரை

(2) தரிசன நேரங்கள்

காலை : 7.00 மணிமுதல் – பகல் 12.00 மணிவரை
மாலை : 6.00 மணிமுதல் – இரவு 8.00 மணிவரை

மாசி மகம் பெருவிழா

காலை : 5.30 முதல் பகல் – 1.00 மணி வரை
மாலை : 3.00 மணிமுதல் இரவு – 1.00 மணிவரை

(3) போக்குவரத்து வசதி

காஞ்சிபுரம் – உத்திரமேரூர் சாலை, வழி ஒரிக்கை
(16 கிலோ மீட்டர்)
இத்திருக்கோயில் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ளது.

மாகறல் திருத்தல வரலாறு நிறைவு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்புக்காக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வடக்கு உட்புற மதிற்சுவர்

தெற்கு உட்புற சுவர் ஒட்டி உள்ள மண்டபம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



தெற்கு வெளிப்புற மதிற்சுவர்



கருவறை விமானம்
[கஜப்பிரஷ்டம் அமைப்பு]

யானை வாகனத்தில்
முருகர்

ஸ்ரீ விஜயா பிரிண்டிங் பிரஸ், நெ. 46, ஜோன்ஸ் ரோடு, சைதை, சென்னை-15.